பதிவு எண் M. 4900 16 பக்கங்கள்.

# குடி அரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0 ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 25-6-1949 சனிக்கிழமை } மலர் 42.

# பார்வதி-பரமசிவன் அழுகை

★

பார்வதி:—எனது பிராணநாதனாகிய ஓ சிவபெருமானே! ஆகாயத்தில் பறக்கின்ற கெருடன் என்கிற பட்சியைப்பார்த்து பலர் காலையிலும் மாலையிலும் கன்னங்கன்னமாய்ப் போட்டுக்கொள்ளுகிறார்களே அது எதற்காக நாதா?

பரமசிவன்:— கண்மணி! இது உனக்குத் தெரியாதா? கருடன் நமது அடிமையாகிய மகாவிஷ்ணுவுக்கு வாகனமல்லவா? அதனால் விஷ்ணு பக்தர்களில் சிலர் கருடனைக்கண்டால் கன்னத்திலடித்துக் கொள்ளுகிறார்கள்.

பார்:- ஓஹோ! அப்படியா சங்கதி! சரி, அப்படியானால் நமது அடிமை வாகனத்திற்கு இவ்வளவு மதிப்பு இருக்கும்போது, நம்முடைய வாகனமாகிய காளை மாட்டைக் கண்டால் ஏன் யாரும் கன்னத்திலடித்துக்கொள்வதில்லை? அன்றியும் வண்டியில் கட்டி ஓட்டுகிறார்கள், ஓடை அடிக்கிறார்கள், செக்கில் கட்டி ஆட்டுகிறார்கள், அடித்துக்கூடத் தின்றுவிடுகிறார்களே அது ஏன்?


பரம:- நம்முடைய பக்தர்களுக்கு அவ்வளவு பக்தி இல்லை. நன்றாகச் சாம்பலைப்பூசிக்கொள்ளத்தான் தெரியும். நமது வாகனத்தினிடத்தில் பக்தி காட்டத் தெரியாது.

பார்:-அதுதான் போகட்டும், நமது குமாரனாகிய கணபதியின் வாகனமாகிய பெருச்சாளியைக் கண்டால், ஏன் கன்னம்கன்னமாய் அடித்துக்கொள்ளாமல் தடி எடுத்து அடித்துக் கொன்றுவிடுகிறார்கள்? அய்யோ பாவம்!

பரம:- கணபதியின் பக்தர்களுக்கும் போதுமான பக்தி கிடையாது. ஏனென்றால் கணபதிக்கு அபிஷேகம் செய்யும்போது அவனது வாகனமாகிய கல்லுப்பெருச்சாளிக்கும் அபிஷேகம் செய்வார்கள். அதற்கும் பால், நெய், தயிர் ஊற்றிக் கொழுக்கட்டையை வைப்பார்கள். உயிருடன் காணும்போது ஓடி ஓடி அடிப்பார்கள். நம் பக்தர்கள் யோக்யதையே இப்படித்தானே! இந்த வெட்கக்கேட்டை யாருடன் சொல்லுவது!

பார்:- அதுதான் போகட்டும், தங்களுடைய மற்றொரு வாகனமாகிய நாயைக் கண்டால் ஒருவரும் கன்னத்தில் அடித்துக் கொள்ளாமல் எல்லோரும் 'சோடு! சோடு!' என்று விரட்டுகிறார்களே! அது என்ன காரணம் நாதா?

பரம:-கண்மணி! அதுவும் பக்தர்களின் அறியாத்தனம்தான். ஆனாலும் அது மலம் சாப்பிடுகின்றதல்லவா? அதனால் அதன்மீது சிலர் அசுசிப்படுகின்றார்கள்போல் இருக்கின்றது.




பார்:- என்ன நாதா, வைரவக் கடவுள் வாகனம் மலம் சாப்பிட்டால் மகாவிஷ்ணுவின் வாகனம் அதிலுள்ள பூச்சி, புழு, நத்தை, நண்டு முதலிய அசுசியமான வஸ்துக்களையெல்லாம் சாப்பிடுகின்றதே! அதையெல்லாம் அந்தப் பக்தர்கள் மன்னிக்கும்போது மலம் சாப்பிடுவதை மாத்திரம் ஏன் நமது பக்தர்கள் மன்னிக்கக் கூடாது?

அதுதான் போகட்டும் நமது குமாரன் வாகனமாகிய மயிலைக் கண்டால் ஏன் முருக பக்தர்கள் கன்னங்கன்னமாய்ப் போட்டுக் கொள்வதில்லை? அன்றியும், ஆட்டைக் கண்டால் அடித்துத் தின்றுவிடுகிறார்களே? அவன் கொடியாகிய சேவலைக் கண்டால் அறுத்துத் தின்றுவிடுகிறார்கள்? இது என்ன அநியாயம்!

பரம:-அது அந்தப்பக்தர்களின் பக்திக்குறைவு. அதற்கு நாம் என்ன செய்யலாம்.

பார்:- நாதா! சரி சரி, இதையெல்லாம் பார்க்கும்போதுதான் எனக்கு மிகவும் வெட்கக்கேடாயிருக்கின்றது. நமக்குக் கீழ்ப்பட்ட விஷ்ணுவின் வாகனத்திற்கு மாத்திரம் உலகத்தில் இவ்வளவு கௌரவமும், அவர் பக்தர்களுக்கு மாத்திரம் இவ்வளவு பக்தியும் இருப்பதும், நமது வாகனங்களுக்கு இவ்வளவு மரியாதைக் குறைவும், நமது பக்தர்களுக்கு இவ்வளவு பக்திக்குறைவும் இருப்பதும் எனக்கு வெளியில் தலை நீட்ட முடியவில்லையே? தவிர மகாவிஷ்ணுவின் பெண்ஜாதியான மகாலக்ஷிமிகூட இதனாலேயே அடிக்கடி என்னைப்பார்த்துப் பரிகாசம் பண்ணுகின்றாள். தவிர நம்முடைய பக்தர்களிலும் பலர்

ரோஜா முத்தையா

# சாவுக்குப் பின்னால் . . . ?

★

இவ்வுலக வாழ்க்கைக்கும், மேலுலக வாழ்க்கைக்கும் மத்தியில் ஏற்படும் சாவு என்னும் ஏதோ ஓர்வித நிகழ்ச்சியைப் பற்றிய கொள்கைகள் தான் மதத்தைப் பிரபலமாகப் போற்றும் மதவாதிகளுக்கு மூலபலமாய் இருக்கிறது.

சாதாரண மக்கள் மரணம் என்பதை, மன வாக்குக் காயங்களுக்கு எட்டாத ஏதோ ஓர்வகை அசாதாரண சம்பவமாகவே கருதுகின்றனர். அதிதைரியசாலிகளும் சாவு என்றால் பீதி கொண்டு, அதினின்றும் மீள்வதற்கான எத்தகைய செயல்களையும் உடனே செய்ய முற்படுகின்றனர். உண்மையில் மரணத்தைப் பற்றிய பயமானது ஜனசமூகத்திற்கு ஒருவிதத்தில்நன்மையே உண்டாக்குகின்றது என்று சொல்லலாம். ஏனெனில் வாழ்நாளில் ஏற்படும் பல்வேறு சம்பவங்களில் மரணத்தையும் ஒன்றாகக் கருதும் எந்த சமூக வாழ்வும் மன அமைதியோடிருத்தல் அரிது. மனிதர்க்கு ஆயுட்காலம் மிகவும் முக்கியம் ஆதலின், ஒவ்வொருவரும் அதனை இயன்ற அளவுகாப்பாற்றல் அத்தியாவசியமேயாம். ஏன்? இவ்வுலகில் தோன்றும் பல்வேறு ஜீவன்களின் வாழ்வும் தத்தம் உயிர் நிலைப்புக்குப் போராடுவதிலேயே இருக்கின்றதெனக் கூறலாம். இவ்விதமான ஜீவிதவுணர்ச்சி உயிர்வாழ் பிராணிகளிடம் இல்லாதிருப்பின் ஜீவராசிகள் வெகு காலத்திற்கு முன்னரே இவ்வுலகத்திலிருந்து மறைந்து போயிருக்க வேண்டும்.

உயிரின் ஆதியையும், அந்தத்தையும் அறிய வேண்டுமென்ற அவாவானது எக்காலத்திலும் ஓரே தன்மையில் இருத்தல் கவனித்தற்பாலது. விஞ்ஞான விற்பன்னர், எப்போதாவது ஒரு காலத்தில் ஒரு பரம அணுவைத் தாங்களாகவே (Protoplasm) சிருஷ்டித்துவிடக்கூடும்; ஆனால் அதற்கு அறிவைப் புகட்டி பலவித மேலறிவுப் பிராணிகளாகத் தோற்றுவிக்க அவர்களால் முடிவது கஷ்டம். "ஜடம்" என்ற அசேதனப் பொருளிலே "ஆத்மா" வெனும் சத்பொருள் ஒன்று அதற்கு அந்நியமாக இருக்கின்றதா? இல்லையா? என்பதைப் பற்றி நாம் இங்கு ஆராயப்புகவில்லை; எனினும் ஜடப்பொருள் இன்றேல் உயிரின் பலவித பரிணமிப்பை எவ்விதத்திலும் அறிந்து கொள்ள முடியாது என்பது மாத்திரம் உண்மை. சரீர சாஸ்திர விற்பன்னர்களும் (Physiologists) அறிவின் பலவித ஆற்றல்கள் மூளையிலிருக்கும் பல அணுக்களின் வெவ்வேறு வகையான சேர்க்கையினாலே தான் ஏற்படுகின்றனவெனக் கூறுகின்றனர். இசனால் ஜடபதார்த்தங்களின் (Matter) மூலமாகத்தான் அறிவின் தன்மையை உணரவேண்டுமென்று தெரிகின்றது. எனவே சாதாரணமாக மனிதன் தன் வாணாளில் உயிர் அல்லது ஆத்மாவைப்பற்றிப் பிரமாதமாக எண்ணாமல், அது தனது புத்திக்கு எப்படி உணரப்படுகிறதோ அவ்விதமே எங்குமுள்ளதாக நினைக்க வேண்டியதோடு, தன் அறிவு அவ்வப்போது எதெதை உணர்த்துகின்றதோ அதை அனுசரித்து வாழ்க்கையையும் நடத்துதல் வேண்டும். மரணத்திற்குப் பின் ஜீவன் எத்தோற்றத்தோடு இருக்கின்றதென்பது விஞ்ஞான விற்பன்னராலேயே ஆராயத்தக்க விஷயமாகும். தற்சமயம் அவ்விஷயத்தைப்பற்றிய அத்தாட்சிகளை ஆத்மவாதிகள் (Spritualists) எத்தனையோ சோதனைகளால் விளக்க முற்பட்டும், அவற்றை அறிஞர் ஏற்றுக்கொள்ளத்தக்க நிலைமைக்கு வரவில்லை. எது எவ்வாறிருந்த போதிலும் நிருமாணித்துக்காட்ட முடியாத விஞ்ஞான ஆராய்ச்சி முறையில் சோதித்துத் தெளியப்படாத—ஏதோ ஒரு யுகத்தில், எவராலோ அவரவர்களுடைய உத்தேசத்திற்கும், மனப்பான்மைக்கும், பயத்திற்கும் தக்கபடியாகச் சொல்லப்பட்ட மேற்குறித்த மரண சம்பந்தமான கூற்றுக்களால் இந்த ஆத்மாவைப் பற்றிய விஷயத்தை முடிவு கட்டுதல் அறிவுடைமைக்கு அழகல்ல.

ஏற்கனவேயுள்ள மரணத்தைப் பற்றிய பீதியை பலவித மதங்கள், அவற்றின் பலவகையான மௌடீக சாஸ்திர சித்தாந்தங்களாலும், மூடத்தனமான எத்தனையோ வகையான சடங்குகளாலும் எவ்வளவோ மடங்கு அதிகமாக்கி வருகின்றன. நரக லோகங்களென்ன? ஆங்காங்கு நேரும் சித்திரவதைகளென்ன? இறந்த பின்னும் இவ்வுலகிலுள்ள ஆபாசங்களால் அவனது ஆத்மா துன்பமடைவதென்ன? இறந்து பிறத்தல், பிறந்து இறத்தல்களென்ன? சித்ராகுப்த எமதூத வேதனைகளென்ன? இன்னும் இவை போன்ற எண்ணற்ற ஆபாச சித்தாந்தங்களே இப்போது மனித சமூகத்தைக் கணக்கற்ற கஷ்டங்களால் நெக்கு விட்டு நைந்துருகும்படியான பழக்க வழக்கங்களில் ஈடுபடுத்திப் பரிதவிக்கச் செய்து வருகின்றன.

உயிரிழந்த சரீரத்தைப் பல மதத்தினர் பற்பல விதங்களில் தகனம் செய்து வந்த போதிலும், எல்லா மதத்தினரும் மாண்டோருக்குரிய ஈமக்கிரியைகளைச் சரி

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

---

அறிவில்லாமல், நம்ம வாகனத்தை மரியாதை செய்யாமல் இருப்பதோடல்லாமல், விஷ்ணு வாகனத்திற்கு விஷ்ணு பக்தர்களைப் போலவே கன்னங்கன்னமாய்ப் போட்டுக்கொண்டு மரியாதை செய்கிறார்களே இது என்ன மானக்கேடு! தாங்களே யோசித்துப் பாருங்கள்,

பரம;- என்ன செய்யலாம், சகி! நம் தலையில் பிர்ம்மன் இப்படி அவமானப்படும்படியாக விதித்து விட்டான். விதி யாரை விட்டது சொல் பார்ப்போம். என் கண்மணி! நீ இதற்காக அழவேண்டாம். உன்னைப் பார்த்தால் எனக்கும் அழுகை வருகிறது.

பார்:- சரி சரி இதற்காக நான் ஒருத்தி அழுவது போதாதாக்கும் இனி நீங்கள் வேறா அழுகவேண்டும்! போனால் போகட்டும்! இம்மாதிரி நம் தலையில் எழுதிய அந்த பிர்ம்மாவைப் பேசிக்கொள்ளலாம். வாருங்கள் நம்ம வேலையைப் பார்க்க நாம் போவோம்.

ஜா முத்தையா

# ஆளவந்தாருக்கு எச்சரிக்கை!

★

“சுயராஜ்ஜிய சர்க்காருக்கும் அந்நிய சர்க்காருக்கும் உள்ள வித்தியாசத்தை யார் முதலில் உணர வேண்டுமோ அவர்கள் இன்னமும் உணராமல் இருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. ஜனங்களைப் பொறுத்தவரை இந்த வித்தியாசத்தை முன்பே உணர்ந்து விட்டார்கள். சர்க்கார்தான் இன்னும் உணரவில்லை என்பதற்கு “விடுதலை”ப் பத்திரிகைக்கு ரூ. 10,000 ஜாமீன் கேட்டிருக்கும் உத்தரவே ஒரு உதாரணமாகும்” இது ஆளவந்திருப்பவர்களின் அறியாத்தனத்திற்கு ஒரு விளக்கம்.

“தமிழ் நாட்டின் பத்திரிகை உலக சரித்திரத்திலேயே இதுவரை எந்தப் பத்திரிகைக்கும் இவ்வளவு அதிகமான ஜாமீன் தொகை கேட்டதில்லை. சரித்திரமே கண்டிராத சாதனையைத்தான் நம் சுயராஜ்ஜிய சர்க்கார் சாதித்திருக்கிறார்கள். ஏற்கனவே இந்தப் பத்திரிகை கட்டியிருந்த ரூ. 2000 ஜாமீன் வேறு பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது”—இது வெள்ளையன் ஆண்ட காலத்திலேகூட தமிழகம் காணாத அநீதி இன்று தலை விரித்தாடுகிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

“அதிகாரத்தில் உள்ளவர்கள் தான் அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு முன்னால் தயங்கவேண்டும். துஷ்பிரயோகம் ஆகிவிடக்கூடாதே என்று பயப்படவேண்டும். சென்னை சர்க்காரின் உத்திரவில் இந்த தயக்கமோ, பயமோ இருப்பதாகத் தெரியவில்லை. தங்கள் அதிகாரம் எது வேண்டுமானாலும் செய்யுமென்ற எண்ணம் தான் இதில் தெரிகிறது”—இது ஆளவந்திருக்கும் அதிகார வர்க்கத்தின் எதேச்சாதிகாரப் போக்கையும், அதிகாரம் இருக்கிறது என்கிற ஆணவத்தையும், அதிகாரத்தை அவசியமற்ற விஷயங்களிலெல்லாம் அனாவசியமாக துர்வினியோகம் செய்கிறார்கள்.—கள்ள மார்க்கட்டில் கொள்ளையடிக்கும் கதர்ச் சட்டைக்காரர்களுக்குச் சலுகை காட்டுவது முதல், வகுப்பு நீதிக்காகப் போராடும் “விடுதலை” மீது பாய்வது வரை பல வகைகளிலும்—என்பதற்கு ஒரு படப்படிப்பு.

“எந்தக் கட்சிப் பத்திரிகையாக இருந்தாலும் சரி, அதன் இடுப்பை ஒடிக்கும்படியான காரியத்தை இஷ்டம் போல் செய்வது என்பது ஜனநாயகத்தையே குழிதோண்டிப் புதைப்பதாகும்”—ஆட்சி பாசிசப் பாதையில் செல்கிறது. இறந்து போன ஹிட்லரும்,—முசோலினியும், புரட்சி அனலிட்டுப் பொசுக்கப்பட்ட ரஷ்ய ஜாரும் இன்றைய சென்னை அரசாங்கப் பொறுப்பை ஏற்று நடத்த முற்படுகிறார்கள் என்று ஓர் எச்சரிக்கை!

“விடுதலை இழைத்திருக்கும் தவறு பத்திரிகை உலகத்திற்குப் புதிதல்ல. “விடுதலை” விஷயத்தில் எந்த வகுப்புவாத உணர்ச்சி குற்றமாகக் கருதப்படுகின்றதோ அதே குற்றத்தைப் பிற பத்திரிகைகளும் செய்திருக்கின்றன......... எனவே ‘விடுதலை’ மீது மட்டும் நடவடிக்கை எடுக்கும் சர்க்கார் இதே குற்றத்தைச் செய்யும் மற்றவர்கள் விஷயத்தில் என்ன செய்யப்போகிறார்கள் என்பது தெரியவில்லை. மேலும் ‘விடுதலை’ பத்திரிகை இழைத்த தவறு இமயமளவு இருந்தாலும்கூட கோர்ட்டுக்குப் போவதுதான் ஜனநாயக தர்மம்”—இது ஆட்சியாளரின் ஓரவஞ்சனைப் போக்கிற்கும், நியாயமற்றதும், ஜனநாயகத்திற்கு அப்பாற்பட்டதுமான செய்கைக்கு ஒரு விமர்சனம்.

“பத்திரிகை சுதந்திரம் என்பது வரும் போகும் மந்திரிமார்களின் விருப்பு வெறுப்புக்கு உள்ளடங்கிய அற்ப விஷயமாகிவிடும்......... எனவே இந்த ரூ. 10,000 ஜாமீன் கெடுபிடி உத்திரவு புத்திசாலித்தனமானதுதானா என்பதை சென்னை சர்க்கார் புனராலோசனை செய்வார்களாக. இதற்கிடையில் பத்திரிகை சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமென்று உண்மையில் நினைக்கிறவர்கள் பிரஸ்தாப சர்க்கார் உத்திரவைக் கண்டிக்க முன் வருவார்களாக. ஏனெனில் இந்த உத்திரவில் பத்திரிகா சுதந்திரம் படுகொலையாகியிருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. எனவே பத்திரிகை சுதந்திரத்தைக் காப்பதாகக் கூறிக்கொண்டிருக்கும் அகில இந்தியப்பத்திரிகாசிரிய மகாநாடும், சங்கங்களும், பெடரேஷன்களும் இதில் தீவிரக் கவனம் செலுத்தவேண்டும். இந்த உத்திரவு ரத்தாகும் வரை கிளர்ச்சி செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்”

மேலே கண்ட விளக்கம், எடுத்துக்காட்டு, படப்பிடிப்பு, போர் முரசு அடங்கிய தலையங்கம் ஒன்றை சென்னை 14-6-49 இதழில் ‘தினசரி’ தீட்டியிருக்கிறது. தினசரியின் இந்தத் தீவிரப் போக்கையும், நியாயத்திற்குப் பரிந்து பேசும் உள்ளப் பண்பையும் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். “விடுதலை” முன்னர் கட்டியிருந்த ரூ. 2000ஜாமீன் தொகையைப் பறிமுதல் செய்து விட்டு, மீண்டும் ரூ. 10,000 புதிய ஜாமீன் கட்டவேண்டுமென்று கேட்டிருக்கும் அரசாங்கத்தின் நீதிக்கு அப்பாற்பட்ட போக்கைக்கண்டு “தினசரி”யாரின் இரத்தம் கொதிப்பேறி விட்டது என்பதை அவரது தலையங்கம் நன்கு எடுத்துக்காட்டுகிறது. அது மட்டுமல்ல, ‘பத்திரிகையாளர்மாநாடும், பெடரேஷனும், சங்கங்களும் இந்த உத்திரவு ரத்தாகும் வரை கிளர்ச்சி செய்யவேண்டும்’ என்று போர்முரசு கொட்டுகிறார். அவரது முரசின் ஒலி யார் காதில் விழாவிட்டாலும், ஆட்சியாளர் காதில் சுறுக்கெனப் பாய்ந்திருக்குமென்றே நம்புகிறோம். இந்த விஷயம் மீண்டும் புனராலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நீதி வழங்கப்படுமென்று நாம் எதிர்பார்க்கவுமில்லை. “தினசரி” ஒரு தேசீய ஏடு—அதுவும் இன்றையக் குமாரசாமி ராஜாவின் மந்திரிசபையைக் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிப்பது. இப்படிப்பட்ட பத்திரிகை “விடுதலை” மீது சர்க்கார் அடக்கு முறை ஈட்டிகளை வீசுவதைக் கண்டு ஆர்ப்பரிக்கிறது என்றால்,

அதில் ஏதாவது அர்த்தமிருக்கத் தான் வேண்டும். ஆம், தினசரியார் தேசியவாதியாக இருக்கலாம், கதருடையில் காட்சியளிக்கலாம். ஆயினும் அவருடைய உடலில் இன்னமும் திராவிட இரத்தம் ஓடிக் கொண்டிருக்கிறது, அவருடைய உள்ளத்தில் திராவிட உணர்ச்சி மண்டிக்கிடக்கிறது என்பதை அவரது தலையங்கம் மக்களுக்குத் தெளிவுபடுத்தி விட்டது. இதைப்போல இன்னும் எத்தனையோ பேர்களுடைய உள்ளங்கள் வேதனையால் துடித்துக்கொண்டு தானிருக்கும். சமயம் வரும்பொழுது அவை கண்டிப்பாக வெளிவந்துதான் தீரும். எரிமலை வெடிப்பதையும், பயங்கரமான பூகம்பம் ஏற்படுவதையும், கொடூரமான புயல்காற்று வீசவிருப்பதையும் அதனால் கடல் கொந்தளித்து குமுற விருப்பதையும் முன்கூட்டியே தெரிந்துகொள்ள முடியும்—விஞ்ஞானம் பரவியிருக்கும் காரணத்தால். ஆனால் அதைத்தடுத்து நிறுத்திவிட முடியாது. அதனால் பாதிக்கப்படாமல் விலகியிருக்க முடியும், கொஞ்சம் விவேகமிருந்தால். இதைப் போன்றதுதான் இன உணர்ச்சியும். இது இயற்கையாக எழும் எழுச்சி. இதை எவராலும், எந்தவித அடக்குமுறைச் சட்டத்தைக்கொண்டும் அடக்கமுடியாது என்பதை ஆளவந்தாருக்கு எச்சரிக்கிறேன்.

நாட்டு நலத்திலும், ஜனநாயகம் வளர்ச்சிபெற வேண்டும் என்பதில் அக்கரையும் உடைய எந்த பத்திரிகையும்—எழுத்தாளனும் இன்றைய அரசாங்கம் விடுதலை, திராவிடநாடு ஆகிய ஏடுகளின்மீது பாய்ந்திருக்கும் போக்கைத் தீவிரமாகக் கண்டித்தேயாகவேண்டும். எழுத்துரிமை பறிக்கப்படும்பொழுது எந்த எழுத்தாளனும் உறங்கிக்கொண்டிருக்க முடியாது. பத்திரிகா சுதந்திரம் காற்றில் பறக்க விடப்படும்பொழுது, இலட்சியத்திற்காகப் பாடுபடும் எந்த பத்திரிகையும் பல்லிளித்துக்கொண்டு சும்மாவிருக்க முடியாது. காசுக்கு பேனா பிடிக்கும் எழுத்தாளனைப் பற்றியும், பிற்போக்கு வியாபாரப் பத்திரிகைகளைப்பற்றியும் நமக்கு கவலையில்லை. பத்திரிகா சுதந்திரத்தைப்பாதுகாக்கப் போவதாக பீத்திக்கொண்டிருக்கும் தென்னிந்திய பத்திரிகையாளர்சம்மேளனம், இந்த விஷயத்தில் வாய் மூடிக் கொண்டு இருக்கிறது! ஒருவேளை பத்திரிகைகளின் விளம்பரத்தின் மீது விதிக்கப்படும் வரி போன்றவைகளை எதிர்ப்பதுதான் பத்திரிகா சுதந்திரம் போலும். அது மட்டுமல்ல, இந்த பெடரேஷனின் தூண்டுதலால்தான் "விடுதலை"யின் ஜாமீன் பறிக்கப்பட்டு புது ஜாமீனும், திராவிடநாட்டிற்கு ஜாமீனும்கேட்டதுபோன்ற கேலிக்கூத்துகள் நடைபெற்றிருக்கின்றன இதைப்பற்றி நாம் கவலைப்பட்டு என்ன செய்வது? தென்னிந்திய பத்திரிகையாளர் பெடரேஷன் என்ற திரையில் புகுந்துகொண்டு திராவிடர் கழகத்தையும், அதன் ஓயாத உழைப்பினால் நாட்டில் பரவியிருக்கும் இனஉணர்ச்சியையும் ஒழித்துவிட முயற்சிக்கும் ஆரியமே! உனக்கு அழிவுகாலம் நெருங்கிவிட்டதென்று எச்சரிக்கிறேன்.

* *

ஆளவந்தார்களே! உங்களிடம் அதிகாரம் இருக்கிறது. அதை அமுல்நடத்த அடக்குமுறைச் சட்டங்களும், பட்டாளமும் வேண்டியஅளவு இருக்கிறது என்பதையும் தெரிந்துதான் உங்களை எதிர்க்கிறோம். ஆட்சி பீடத்தில் உங்களை ஏற்றிவைத்து, அதிகாரத்தைஉங்களிடம்கொடுத்திருக்கும் மக்களையே அடக்கி ஒடுக்க அதிகாரத்தைப் பயன்படுத்துகிறீர்கள். இந்தவிபரீதப்போக்கின் விளைவும் வேதனை தருவதாக முடிந்துவிடும் என்பதை இன்னமும் நீங்கள் உணரவில்லை என்பதையே 'விடுதலை', திராவிடநாடு' ஆகிய பத்திரிகைகளின் விஷயத்தில் நீங்கள் நடந்துகொண்டிருக்கும் போக்கிலிருந்து தெரிகிறது. எந்த மக்களின் சக்தி, உங்களை மந்திரிகளாக்கியதோ அதே சக்தி, நாளை உங்களை மந்திரி நாற்காலியினின்று தலைகீழாகஉருட்டிக்கீழே தள்ளிவிடும் ஆற்றல் பெற்றது என்பதை இந்த ஜனநாயக யுகத்தில்கூட நீங்கள் உணராமலிருப்பது ஆச்சரியமாக விருக்கிறது. அதிகாரம் இருக்கிறது என்ற காரணத்தால் எதையும் செய்துவிடமுடியும். யாராலும் தடுக்க முடியாது என்று கருதிக்கொண்டு கொடுமையை கூத்தாடவிட்ட மன்னாதி மன்னர்களெல்லாம் மண்ணோடு மண்ணாக மறைந்துபோனதைச் சரிதம் விளக்குகிறது. ஆனாலும், மதுவிலும் மயக்கமூட்டும் அதிகார போதையில் மூழ்கிக் கிடக்கும் நீங்கள் செய்யும் கொடுமைகளைக்கண்டு, இனியும் மக்கள் வாய்மூடி மௌனியாகச் சும்மாவிருக்கமாட்டார்கள். இந்தப் போக்கை மாற்ற ஏதாவது வழி செய்தே தீருவார்கள் என்று எச்சரிக்கிறேன்.

ஆரியத்தின் புன்சிரிப்பைப்பெற திராவிட இன உணர்ச்சியை அழிக்க ஆரம்பித்திருக்கிறீர்கள். இந்தப் போக்கு எதிர்காலத்தில் ஏளனத்தையும், பழியையும் தான் பரிசாகப்பெற்றுத் தருமே தவிர,வீராதிவீரர்கள் என்ற விருது பெற்றுத் தராது. விழிப்புற்றவீர இனத்தின்எழுச்சியைக்கிள்ளிவிடலாமென்று மனப்பால் குடிக்கிறீர்கள். வேண்டாம் இந்த விபரீதப் போக்கு. சமுதாயத்தைக் காட்டிக்கொடுத்த துரோகிகளென்று வருங்காலச்சந்ததியார்கள் தூற்றுவார்கள் என்று எச்சரிக்கிறேன்.

ஆளவந்தார்களே! சென்ற ஆண்டு "விடுதலை"ப் பத்திரிகை ரூ. 2000 ஜாமீன் கட்டவேண்டுமென்று கேட்டிருந்தீர்கள். அடக்குமுறை அம்பு திராவிட கழகத்தை நோக்கி வீசப்படுகிறது என்பதை உணர்ந்த மக்களின் உள்ளத்தில் பெரும் குமுறல் ஏற்பட்டது. அதன் எதிரொலியாக நீங்கள் கேட்டிருந்த தொகையைவிட எட்டுமடங்கு அதிகமான பணத்தை மக்கள் அனுப்பிவைத்தார்கள். ஆம், பணக்காரர்களினாலும் பட்டதாரிகளாலும் அனாவசியமாகஎழுதிக்கொடுத்த 'செக்'களினாலோ அல்லது கரன்சிநோட்டுகளாலோ கிடைத்ததல்ல அந்தத் தொகை. ஏழைப் பாட்டாளி மக்கள் கொடுத்த ஒரு ரூபாய்க்கு உள்பட்ட நாணயத்தினால்தான் அவ்வளவு பெரிய தொகை சேர்ந்தது. இந்த நிலைமை எதை எடுத்துக் காட்டுகிறது? ஏழைப் பாட்டாளி மக்களிடமும், நாட்டிலேயும் "விடுதலை"க்கு உள்ள செல்வாக்கை எடுத்துக்காட்டவில்லையா? மக்களிடம் இவ்வளவு பெரிய செல்வாக்கும், ஆதரவும் உள்ள பத்திரிகையிடம் ஜாமீன் கேட்டுவிட்டோமே என்று வருந்தி—வெட்கப்பட்டு—ஜாமீன் தொ

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

# நீலவான நிலவு!

★

“அம்மா!”

“என்னடி?”

“குழந்தை ஓரே பிடிவாதம் பிடித்து ஓயாமல் அழுதுகொண்டிருக்கிறானம்மா”

“ஏனடி அழுகிறான், அவன் எங்கே?”

“நிலா முற்றத்தில் இருக்கிறானம்மா, போய்த் தூக்கி வரட்டுமா?”

“வேண்டாமடி நானே வருகிறேன்”

* *

அரசியின் மகன் அழத்தொடங்கியது அச்சத்தையூட்டியது அரசியின் தாதிக்கு. தாதியால் குழந்தையின் அழுகையை நிறுத்த முடியவில்லை! ஓடினாள் அரசியிடம் விபரத்தை விளக்க! அரசியும் அச்சத்தோடு நிலா முற்றத்தை நெருங்கினாள்.

“கண்ணே! அழாதேடா, என்ன வேண்டும் உனக்கு”

“அம்மா!......ஊ...ஹூ...ம்”

“ஏனடா இந்தப் பிடிவாதம்; வேண்டுவதைக் கூறடா?”

அரசி—அன்புமொழியிலே குழந்தையிடம் கொஞ்சினாள். குழந்தையின் அழுகை நின்றபாடில்லை!

தன் பிஞ்சுக் கரங்களை மேலே தூக்கி நீல வானத்தைச் சுட்டிக் காட்டியது குழந்தை!

தாய் ஆச்சரியத்தோடு நீல வானத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

கரத்திலுள்ள வளையல்கள் இன்னிசை பாட; காதிலுள்ள அணி வகைகள் ஊஞ்சல் ஆட; பாதி முகத்தை மறைத்திருந்த—சல்லாத்துணி காற்றிலே சரிந்து ஓட; தன் “முதல் இரவு” அனுபவத்துக்கு பஞ்சணையை நெருங்கும் புது மணப்பெண்......... போல, நிர்மலமான நீல வானிலே முழு நிலவு பவனி வந்துகொண்டிருந்தது.

முழு நிலவைக் கண்களால் விழுங்கிவிட்டு—குழந்தையின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள் அரசி.

குழந்தையும் அழுகையை சிறிது நிறுத்தித் தன் பார்வையை அரசியின் முகத்தில் பாயவிட்டது.

சாதாரண நாட்களாக இருந்து அதுவும் நிலா முற்றத்திலே குழந்தையைத் தன் மடியில் அமர்த்தி தானும்ஓரிடத்திலமர்ந்து, குழந்தையின் மழலை மொழி தன்னை மகிழ்வித்துக் கொண்டிருந்த போது, அந்தக் குழந்தை முழு நிலவையும் பார்த்து தன் முகத்தையும் அது உற்றுப்பார்த்திருந்தால்......ஒளி சிந்தும் வானத்து மதிக்கும்—தன்மதி முகத்துக்கும் பார்வைபால் உவமைகாட்டி உளம் களிக்கிறதென; அரசி பூரித்திருப்பாள்!

ஆனால்...குழந்தை அரசியையும்—நிலவையும் மாறி மாறிப் பார்த்தது களிப்புக் கண்களால் அல்ல—கண்ணீர் சிந்தும் கண்களால்!

ஆகவே, இந்த நிலை மகிழ்ச்சி ஊட்டுவதற்குப் பதிலாக—மருட்சி யூட்டியது அரசிக்கு.

வார்த்தையிலே வாஞ்சை ஒழுக குழந்தையின் கண்ணீரைத் தன் கண்ணாடிக் கரங்களால் துடைத்துக்கொண்டே, “ஏண்டா நீல வானத்தையும் நிலவையும்—பார்த்துக்கொண்டே அழுகிறாய்! அந்த நிலவு வேண்டுமா,” என்றாள் அரசி!

கெஞ்சிக் கேட்கும் முறையில் முக அமைப்பை மாற்றிக்கொண்டு “அம்மா! அது எனக்கு வேண்டும்” என்று நீலவானத்து நிலவைச் சுட்டிக்காட்டியது குழந்தை.

மறுமுறையும் “நிலாவா வேண்டும்” என்று ஆச்சரியமும் கேலியும் கலந்த குரலிலே கேட்டாள் அரசி!

இதற்குள் அரச மண்டபத் தாதிகள் குழந்தையைச் சூழ்ந்து கொண்டு நகையாடினர்.

தந்தத்தால் செய்த ஒரு சிறு யானையை குழந்தையிடம் கொடுத்து, “வேண்டாமடா கண்ணே அந்த நிலவு! இதை வைத்து விளையாடு என்றாள் ஒரு தாதி.

யாழ் எடுத்து இசை எழுப்பி குழந்தையின் கவனத்தை தன் பக்கம் இழுக்க—நினைத்தாள் மற்றொரு தாதி.

“அரசியின் மகனல்லவா எதையும் தமதாக்கிக் கொள்ளலாம் என்ற எண்ணங்கொண்டேதான் நிலவும் தனக்கு வேண்டுமென்கிறான்” என்று இதுபோல—இன்னொரு தாசி கேலி பேசினாள்.

இப்படி வரிசையாகப் பேசிய தாதிகளின் பேச்சைக்கேட்டகுழந்தையின் உள்ளத்தில், “நிலவு நிச்சயம் கிடைக்காது” என்ற எண்ணம் வளர ஆரம்பித்தது. மீண்டும் விட்ட இடத்திலிருந்து அழுகையைத் தொடர்ந்தான்.

அவன் அழுகை அரச மண்டபம் முழுவதுமே எதிரொலித்தது. முரசு முழங்கியவுடனே வீரர்கள் பாசறையை நெருங்குவதைப் போல—குழந்தையின் அழுகுரல் அரச மண்டப அதிகாரிகளை நிலா முற்றத்தை நெருங்கச் செய்தது.

தனி அனுமதியின் பேரில் அரச மண்டபத் தலைமை அதிகாரி, அரசியைப் பேட்டி கண்டார்!

குழந்தை நிலா வேண்டுவதை விளக்கி—அவன் பிடிவாதம் தளர வழியும் வேண்டினாள் அரசி; தலைமை அதிகாரியிடம்.

தலைமை அதிகாரி நெடுநேரம் எண்ணக் கடலில் மூழ்கியெழுந்த பிறகு; தாதி ஒருத்தியை அழைத்து நிலைக் கண்ணாடியொன்றை கொண்டுவரச் செய்தார். பின் அவர்தன் கரத்திலுள்ள கண்ணாடியில் வானத்து முழு நிலவு தெரியும்படி செய்து குழந்தையிடமும், அந்தக் கண்ணாடியிலுள்ள நிலவைக்காட்டி, குழந்தையையும் தன் அருகே வரச்செய்தார்!

குழந்தையின் குதூகலத்திற்கு எல்லையில்லை! ஆடிப்பாடி ஓடியது கையிலுள்ள கண்ணாடியில் நிலவைக் கண்டு.

அரசி அகமகிழ்கிறாள், குழந்தையின் அலறல் நின்றது குறித்து!

தலைமை அதிகாரி கௌரவிக்கப்படுகிறார்; குழந்தையின் கதறலை நிறுத்த உதவினார் என்பதற்காக!

சற்று நேரத்திற்கு முன்பு பரபரப்பு ஏற்பட்ட நிலா முற்றத்தில் பரவசம் ஊற்றெடுத்தது!

* *

குழந்தை நிலவு வேண்டுமென அழுகிறது! அரசியும் தாதியும், தேற்ற முயல்கின்றனர். மாறாக. குழந்தையின் அழுகுரல் அதிகரிக்

கிறது. தலைமை அதிகாரி நிலவைக் கண்ணாடியிலே விழச் செய்து, குழந்தையின் அழுகையை நிறுத்துங்காட்சி மேலே தீட்டிக்காட்டியிருப்பது.

இந்தக்காட்சி அமைந்த பாடம் சில காலத்துக்கு முன்பு மாணவர்களுக்கு பள்ளிகளில் ஆங்கிலப் பாடமாகக்கூட இருந்தது!

வானத்து நிலவைக் கண்டது முதல் அதை தனதாக்கிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் குழந்தையின் உள்ளத்தில் உதித்துவிட்டது! ஆகவே அது கண்ணாடியில் நிலவைக் கண்டதுதான் நிம்மதியடைந்தது.

தலைமை அதிகாரி சிரித்து நிற்கிறார்—குழந்தை கண்ணாடியிலுள்ள நிலவின் பிரதிபிம்பத்தை உண்மை நிலவென நம்பிவிட்டதே என்ன அதன் அறியாமை;-என எண்ணி!

குழந்தை அறியாதது உண்மைதான்! நிலவுக்கும்.........நிலவின் பிரதிபிம்பத்துக்குமுள்ள தொடர்பை புரிந்துகொள்ளும், ஆற்றலும் அறிவும், அதனிடமிருப்பதில்லை.

மழலைப் பருவம்—தன் மனத்துக்கு சரி என்று பட்டதை நம்பும் பருவம்.

நிலவு கிட்டாதது என்று சொன்னால் அது கேட்குமா?... அதனால்தான் நிலவைக் கண்ணாடியில் விழும்படி செய்து குழந்தையிடம் கொடுத்தார் தலைமை அதிகாரி.

பார்க்கப்போனால் குழந்தைக்கு இந்த நிகழ்ச்சி சிறிது நேரத்துக்குத்தான் மனச்சாந்தியை அளிக்கும்.

நீல வானத்தில் மிதந்து வந்து கொண்டிருக்கும் நிலவு; திடீரென்று மேகத்திரைக்குள்ளே சஞ்சரிக்கும்போது குழந்தையின் கரத்திலுள்ள கண்ணாடியில் முழு நிலவு தெரியாதே!—மேக அலைகள்தானே தெரியும்......அப்பொழுது குழந்தை அழத்தானே செய்யும்-தாம் விரும்பிய பொருள் மறைந்துவிட்டதே என எண்ணி.

தலைமை அதிகாரியின் சிந்தனையில் இந்த எண்ணம் படரவில்லையோ! அல்லது எண்ணம் படர்ந்தும், தற்கால சாந்தியாக குழந்தையின் கதறல் நின்றால் போதும் என எண்ணிவிட்டாரோ தெரியவில்லை!

நாம் கூறியபடியே நிலவுமீது மேகப்படலம் படரும்போது, குழந்தை சஞ்சலமடைந்து அரசியைப் பார்க்கும்-அரசி தலைமை அதிகாரியைப் பார்க்க அவர் வேறுபக்கம் முகத்தைத் திருப்பிக் கொள்வார் விகாரத்தோடு.........

இந்த விந்தையான காட்சி நம் போன்றோர்க்கு வெறும் கேலிச் சிரிப்பைமட்டும் உண்டாக்கிவிட்டு மறைவதற்கு மாறாக 'அந்த நிலா முற்றத்தில் தோன்றிய விந்தையானவர்கள் நம்மிடையேயும் உலவுகின்றனர்,' என்ற காட்சியையும்நம் கண் முன் நிறுத்திவிட்டு மறைகிறது!

நிலா முற்றத்தில் நடந்த காட்சிக்கு அரசி...தலைமை அதிகாரி ...குழந்தை ஆகியோர் உறுப்பினர்கள்!

இன்று நம்மிடையேஉலவுவோர் நடத்துங் காட்சிக்கு, பாரதமாதா காங்கரஸ் தலைவர்கள்......பாரத புத்திரர்கள், ஆகியோர் உறுப்பினர்கள்!

* *

நிலா முற்றத்தில் நிலவு வேண்டுமென அரசியிடம் முறையிட்ட குழந்தையைப்போல, 'தனிஆட்சி' எனும் நிலவு எங்களுக்கு வேண்டுமென சில காலத்துக்கு முன்பு பாரத புத்திரர்கள் பாரதமாதாவைத் துணைகொண்டு வேண்டினர்!

சில காலம் என்றால் ஓரிரு வருடங்கள் அல்ல! ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்கு மேலாக—பாரத புத்திரர்கள்—"தனி ஆட்சி" நிலவு வேண்டி அழுதனர்.

குழந்தையின் அழுகையையும் அரசியின் துயரையும் தீர்க்க...... தலைமை அதிகாரி முன் வந்ததைப்போல...பாரத புத்திரர்களும் பாரத மாதாவும் துயர்க்கடலில் நீந்துவது கண்டு, "நாங்களிருக்கப் பயமேன்" எனக் கூறி காங்கரஸ் தலைவர்கள் முன்வந்து—ஆங்கிலேயன் தயவை நாடி—அந்த ஆங்கிலேயன் கொடுத்த "கண்ணாடி" யின்மூலமாக "தனி ஆட்சி" நிலவு இதோ! என பாரதபுத்திரர்களிடம் கூற...பாரத புத்திரர்களும் நெடுநாளையவாட்டம் நீங்கி அதைப் பெற்றுக்கொண்டனர்!

பாரத புத்திரர்களுக்குக்கிடைத்திருப்பது உண்மையானதனிஆட்சி நிலவு அல்ல—அது வெறும் நிழல் மயக்கு—அதாவது ஆங்கில அதிகாரப்படி Dominion; என்ற விபரங்கள் பாரதமாதாவுக்கும்...காங்கிரஸ் தலைவர்களுக்கும் தெரிந்து தான் இருக்கிறது.

என்றாலும் தற்கால சாந்தியாக பாரத புத்திரர்களின் நெடுநாள் வாட்டம் தீர்ந்தால்போதும்என்று எண்ணியே அவர்கள் இந்த உடனடியான முடிவிற்கு வந்தனர்.

நாம் படித்த அந்த ஆங்கிலக் கதையிலே—மேகப்படலம்நிலவை மறைக்க—அது கண்டு அழுதிடும் குழந்தையைக்...... காணவில்லை. குழந்தை கண்ணாடியில் நிலவைக் கண்டதும் சிரித்து மகிழ்கிறது... இந்த அளவிலேயே அந்தக் கதை முடிவடைகிறது.

ஆனால்......பாரத புத்திரர்கள் தனி ஆட்சி நிலவு பெற்ற கதையோ! ஒரு பெரும் சோகத் தொடர்கதையாக நடந்து கொண்டு வருகிறது!

நமது பாரத புத்திரர்கள் தனி ஆட்சி நிலவுபெற்ற, மறுவிநாடியே—மேகப்படலங்கள் இலேசாக ஊர்ந்தன!

பஞ்சம்
பட்டினி
வேலையில்லாத் திண்டாட்டம்
வேலை நிறுத்தம்
கடன் பளு;

......என்ற மேகப்படலங்கள் ஒன்று திரண்டு பாரதபுத்திரர்களின் தனி ஆட்சி நிலவை மூடிபோட்டு மறைக்கின்றன!

ஏறக்குறைய இப்பொழுது அவர்களின் பார்வையிலிருந்து அறவே மறைந்து விட்டது தனி ஆட்சி நிலவு.

பழைய வாட்டமும்—வருத்தமும் இப்பொழுதுதான் அவர்களைக் கவ்வுகிறது. பாரத புத்திரர்களில் ஒரு சிலர் துணிந்து கேட்கின்றனர் "நிலவைத் தருகிறேன் எனக்கூறி நிழலைக் காட்டிவிட்டாயே" என்று காங்கரஸ் தலைவர்களைப் பார்த்து!

விழித்துவிட்ட புலியைக் கண்டு அஞ்சுவோர் போல, காங்கரஸ் தலைவர்கள் கலங்கி, தனக்கென உள்ள சில பிரச்சார "பீரங்கி"களை "ஏதோ! நம் தலைவர்களின் தயவால் இந்த நிலவாவது கிடைத்தது, இதையும் விட்டு விட்டுப் பின் ஏங்கித் தவிப்பதில் பயனில்லை" என்றுகூற வைக்கின்றனர்!

காங்கரஸ் தலைவர்களிலே நேர்

(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க)

# ஜாமீன் 'கெடுபிடி' பற்றி மற்றவர்கள் தீர்ப்பு.

★

சர்க்கார் போக்குக்கெல்லாம் ரப்பர்போல் வளைந்துகொடுக்காத பத்திரிகைகள்மீது கண்ணோட்டமாக இருந்து மறைமுகமாகத் தாக்குவதும், தூற்றுவதும் "விடுதலை" பத்திரிகை போன்ற சில பத்திரிகைகளுக்கு ஜாமீன் கேட்பதும், பயமுறுத்துவதும் சரியல்ல. "விடுதலை" பத்திரிகைக்கு ரூ. 2000 ஜாமீன் கேட்டார்கள். அதைப் பறிமுதல் செய்தார்கள். அப்புறம் உடனே ரூ. 10,000 ஜாமீன் கட்டும்படி உத்திரவுபோட்டார்கள். அந்த ஜாமீனும் கட்டியாகிவிட்டது. ரூ. 2000 பறிமுதலானதே ஒரு தண்டனை. அதன்பின் சர்க்கார் பொறுத்துப் பார்த்திருக்கலாம். உடனே 10000 கொண்டுவா என்று உத்திரவு போடுவது ஒரு ஜனநாயக சர்க்கார் செய்யக்கூடிய செயல் அல்ல; இதுதானா பத்திரிகைகள் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் லட்சணம்?

### இவர்களுக்கு இடமா?

இவ்வித உத்திரவு போடக் காரணமாக இருந்த மகாப் புத்திசாலி யாரோ? இவ்விதம் 10,000 ரூபாய் ஜாமீன் இதற்குமுன் சென்னை மாகாணத்தில் கேட்டதே கிடையாது. காங்கரஸ் சர்க்கார் அசல் பிரிட்டிஷ் சர்க்காரையும் தோற்கடித்துவிட்டார்கள். இந்த ஜாமீன் கேட்பதற்கு யார் காரணமாயிருந்தாலும் சரி, அவர்கள் ஜனநாயக சர்க்காருக்கே லாயக்கில்லை. காங்கரஸ் சர்க்காரில் அவர்களுக்கு இடமே இருக்கக்கூடாது. அவர்களை வெளியேற்ற வேண்டியதுதான்.

### இந்தப்பாடந்தானே நாளைக்கு

"விடுதலை" பத்திரிகைக்கு எதற்காக இவ்வளவு பெரிய தொகை ஜாமீன் கேட்கவேண்டும்? காங்கிரஸ் சர்க்காரை எதிர்ப்பதற்காகவா, அல்லது ஜாதி, மத துவேஷத்தைத் தூண்டுவதற்காகவா? அப்படியானால் "விடுதலை" மட்டுமா அவ்வாறு எழுதிவருகிறது? 'விடுதலை' பகிரங்கமாக எழுதலாம்; மறைமுகமாக, ஆனால், அதைவிடக் கொடியவிதமாக ஜாதி மதப்பற்றுடன் எழுதும் பத்திரிகைகள் இல்லையா? அந்தப் பத்திரிகைகளிடம் சர்க்கார் ஏன் ஜாமீன் கேட்கத் துணியவில்லை?

இன்று விடுதலைக்கு நேர்ந்த கதியே நாளைக்கு இதர பத்திரிகைகளுக்கும் நேரலாம். எனவே பத்திரிகை தர்மத்தைப் பாதுகாக்கவேண்டியது சகல பத்திரிகைகளின் கடமையாகும். ஒன்று சென்னை சர்க்கார் "விடுதலை"க்குக் கேட்ட ஜாமீன் தொகையை ரத்துசெய்யவேண்டும். இன்றேல், அந்த உத்திரவைப்பற்றிப் புனராலோசனையாவது செய்து ஜாமீன் தொகையைக் குறைக்கவேண்டும். அவசியமானால் விடுதலையைக் கோர்ட்டில் விசாரணைக்குக் கொண்டுவரலாம். அவ்வாறு கொண்டுவராமல், தான் தோன்றித்தனமாக மனம்போல் 10,000 ரூபாய் ஜாமீன் கொடுக்கும்படி கேட்பது கொஞ்சங்கூட நியாயமல்ல; அது ஒரு சர்க்காருக்கு நீதியுமல்ல.

### சுயபுத்தியும் இல்லை சோற்புத்தியும் இல்லை

பத்திரிகைகளின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவே இருப்பதாகக் கூறும் அகில இந்திய பத்திரிகாசிரியர்கள் சங்கம், தென்னிந்திய பத்திரிகையாளர் பெடரேஷன் முதலியவைகள் சென்னை சர்க்கார் உத்திரவை எதிர்த்து என்ன செய்யப்போகின்றன? விளம்பர வரியை எதிர்த்து இந்திய சர்க்காருக்கே மனுப்போடத் துணிந்திருக்கும் இந்த சங்கங்கள் "விடுதலை" ஜாமீன் விஷயமாக என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போகின்றனவென்பதைப் பொறுத்துப் பார்ப்போம்.

காங்கிரஸ் சர்க்கார் மக்கள் சர்க்கார், ஜனநாயக சர்க்கார் என்று சொல்லிக்கொள்ளுவதின் லட்சணம் எப்படி இருக்கிறது பாருங்கள்! எதிர்க்கும் பத்திரிகைகளை நசுக்குவது பெரிய காரியமல்ல; நசுக்கி எடுக்க நினைப்பதும் நேர்மையல்ல. எதிர்ப்பதற்குக் காரணம் என்னவென்பதை அறிந்து, அதைச் சீர்திருத்திக்கொள்ளுவதுதான் சரி. ஆனால், பதவியில் இருந்தால்போதும் என்ற எண்ணமுடையவர்களுக்கு அந்தப்புத்தி எங்கிருந்துவரும்? சுயபுத்தி இருக்கவேண்டும், இன்றேல், சொற்புத்தியாவது கேட்கவேண்டும்? இரண்டும் இன்றேல் என்ன செய்வது? யாரை நொந்துகொள்ளுவது?

### ஜமீன்தார் ஆட்சி!

இது என்ன புது தினுசான ஆட்சியாக இருக்கிறதே யென்று நினைக்கிறீர்களா? ஆமாம், புது தினுசான ஆட்சிதான். மக்கள் ஆட்சி, ஜனநாயக ஆட்சி என்ற பெயரிலேயே அசல் பணநாயக ஆட்சி நடத்த ஆரம்பித்துவிட்டார்கள் நமது காருண்யமிக்க காங்கரஸ் சர்க்கார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த நாட்டில் இருந்தபோது நடைபெறாத அதிசயங்களெல்லாம் இந்த ஆட்சியிலே நடைபெறுகிறது. பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாக்கப் போவதாகப் பறைசாற்றிப் பட்டத்துக்கு வந்த இவர்கள் பத்திரிகை உலகையே பயமுறுத்த ஆரம்பித்துவிட்டார்கள் தங்களுடைய கருத்துக்கு மாறுபட்ட கருத்துடைய பத்திரிகைகளை அழித்துவிடுவது என்று கங்கணங் கட்டிக்கொண்டார்களோ என்னவோ தெரியவில்லை. 'விடுதலை' பத்திரிகைக்கு 10,000 ரூபாய் ஜாமீன் கேட்டிருக்கிறது சென்ன சர்க்கார். ஏற்கனவே வாங்கியுள்ள ஜாமீன் தொகை ரூ. 2000 ஜீரணமாகிவிட்டதாம். இப்பொழுது பசி அதிகமாகயிருப்பதால் ஆட்டுக் குட்டிமீது குற்றம் சாட்டி அதனை விழுங்கிவிட்ட ஓநாய் கதைபோல ஏதோ காரணங்கள் கூறி, கொண்டா 10,000 ரூ. என்று கேட்டிருக்கிறது. விடுதலை மீது சாற்றப்பட்ட குற்றம் சரியா, தவறா என்பது ஒருபுறமிருக்கட்டும். ஜனநாயக தம்பட்டமடிக்கும் இந்த சர்க்கார் ஒரு பத்திரிகையிடமிருந்து ரூ 10,000 கேட்பது சரியா, முறையா, நீதியா,

(தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க)

# குடி அரசு

25—6—49 சனிக்கிழமை.


## இறக்குமதி மோகம் என்று தீருமோ?

வடக்கே காவடி எடுப்பது என்பதும், வடக்கேயிருந்து 'தலைவர்கள்' (வடக்கே இருந்து வந்தாலே தலைவர்கள் தானே) வருவது என்பதும், இங்கே அவர்கள் சமாதானம் செய்வது, பேரம் பேசுவது, விசாரணை செய்வது என்பதும் நமது திராவிடக் காங்கரஸ் தோழர்களுக்கு ஏனோ வெட்கமாகத் தெரிவதில்லை. ஒரு வேளை பழக்கத்தின் முதிர்ச்சியோ என்னவோ, அந்த வெட்க உணர்ச்சி மாத்துப் போய் விட்டது போலும். எப்படி என்றால் நரகல் எடுப்பவனுக்கு நரகலின் நாற்றம் எப்படித் தெரியாதோ அதுபோல.

வடக்கே இருந்து முன்பு காந்தியார் வந்தார். தோழர் காமராஜரை, 'கிளிக்' என்று அப்போது வருணித்தார். தமிழ் நாட்டு ராஷ்டிரபதி என்று பட்டம் கட்டி விடப்பட்ட பேர்வழியின் நிலைமையே, தவித்துத் தாளம் போடவேண்டிய நிலையாய் இருக்கும் போது, மற்ற அப்பாவிகள் என்ன செய்ய முடியும்?

வடக்கே இருந்துவரும் இந்த 'இறக்குமதிகள்' எல்லாம், பெரும்பாலும் பார்ப்பனருடைய கண்காணிப்பில், தயவில், விளம்பரத்தில் இங்கு வந்து போவது என்பது வழக்கமாகி விட்டது. இந்த இறக்குமதிகள் மட்டுமல்ல, நம் நாட்டுப் பூர்வீகப் பெருங்குடி மக்கள் நிலைமையே அப்படித்தானே இருந்து வருகிறது. இன்றையச் சென்னை சர்க்கார்-பெரும்பாலும் திராவிடர்களையே மந்திரிகளாய்க் கொண்டிருக்கும் சர்க்கார் கூட, அசல் வெள்ளையன் சர்க்காரும் வெட்கப்படும்படி நம் பத்திரிகைகளின் மீது, புத்தகங்களின் மீது, நாடகங்களின் மீது, மாநாடுகளின் மீது, சாதாரணக் கூட்டங்கள் மீது எல்லாம் தங்கள் கைத்திறனைக்காட்டவில்லையா? இந்த நடவடிக்கைகள் அவர்களாகவே சர்க்கார் நன்மையை நாடியோ, மக்கள் தொண்டென்று கருதியோ அப்படிச் செய்கிறார்கள் என்று சொல்லமுடியுமா? ஏதோ இப்படி நம்மீது விழுந்து பாயாவிட்டால், ராஜபாளையத்தாருக்கும் ஓமந்தூரார் கதியே ஏற்பட்டுவிடும் என்ற எண்ணம்தானே இந்த ஜாமீன் கெடுபிடிகளுக்குக் காரணம்? நாளைக்கு ராஜபாளையத்தார் ஆட்சியில் நடந்ததென்ன என்று, சட்டசபையில் யாரோ ஒரு இரண்டுக்கெட்டான் பேர்வழி, ஏதாவது ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தால், 'நம் எதிரிகள் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை' என்கிற ஒரு பெரிய பட்டியலைக் கொடுத்தால் அல்லவா ராஜபாளையத்தாருக்குள்ள பேராதரவுக்குச் சாட்சியாகும்! அப்பொழுதல்லவா, மந்திரிகளின் 'விளாசல்' பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில், அவர்கள் போட்டோக்களோடு வெளிவரும். இன்றைக்கும் அதைச் சொல்லித்தானே, பத்திரிகை முதலைகள், சர்க்கார் தங்களுக்குப் போடக் கருதியிருக்கும் விளம்பர வரியை நீக்கவேண்டுமென மிரட்டுகின்றன. சர்க்கார் கையிலேயே பல பாஷைப் பத்திரிகைகளும், ரேடியோக்களும் இருந்தால்தானென்ன, அவைகளுக்காகச் சர்க்கார் பல லட்சங்கள் செலவு செய்துதான் என்ன? நம்நாட்டு ஆரியப் பத்திரிகைகளின் ஆதரவில்லாவிட்டால்—விளம்பரம் இல்லாவிட்டால், இவர்கள் எப்படித் தலைவர்கள் ஆகமுடியும்? இதனை உணர்ந்துதான் நம் மந்திரிகள் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டு விடுதலையின் 2000த்தைப் பறிமுதல்செய்து ரூ. 10000 புது ஜாமீன் கேட்டுள்ளனர். பதவியிலே சிரஞ்சீவியாக வாழத் திட்டமிட்டுத்தான் காங்கரஸ் திராவிடர்களே வெட்கப்படும் நிலையில்—'தினசரி'யே கண்டனத் தலையங்கம் தீட்டும் வகையில் நடந்தாலும், ஆரியத்தின் புன்னகை ஒன்றே போதாதா என்று எதிர்பார்த்து வாழ்கின்றனர். வாழ்க அவர்கள் புத்திசாலித்தனம்! வளர்க அவர்களின் அடக்குமுறை!

இந்த அற்புதமான நம் சர்க்காரிலே சில மந்திரிகளைப்பற்றி பல புகார்கள் அச்சிட்ட புத்தகமாக—ஆதாரங்களுடன் அனுப்பப்பட்டதாம். திராவிடர் கழகத்தாரல்ல. திராவிடக் கழகத்தார் நியாயம் கேட்டால்தான் இம் மமதைகள் கருத்தில் 'காலித்தனம்' எனும் பட்டம் வழங்கப்பட்டு விடுமே! பிராது கொடுத்தவர்கள் பிரகாசம் கோஷ்டியார். இன்றுதான் காங்கிரஸ் கட்சியில் கோஷ்டிகளின் எண்ணிக்கையைக் கூற முடிவதில்லையே.

ஒரு தோழருக்கு ஒரு சிறு சலுகை மறுக்கப்பட்டால் அவர் ஒரு கோஷ்டி; ஒருவருக்கு ஒரு சலுகை செய்து நண்பராக்கிக் கொண்டால் அவர்கோஷ்டி ஒன்று. இப்படித்தானே அவர்களுக்குள்ளே ஆள் சேர்ப்பதும் ஆள் கவிழ்ப்பதும் நடைபெறுகிறது. நாம் எந்த மந்திரிக்கும், எந்தக் கோஷ்டிக்கும் வக்காலத்து வாங்க விரும்பவில்லை. நம் வீட்டுக் குடும்ப நிலையைச் சந்தி சிரிக்கும்படி அன்னியனிடம் காட்டி நீதி எதிர்பார்க்கலாமா? நீதி கிடைக்குமா அன்றி நீங்காப் பழி கிடைக்குமா? இதனை எண்ணிப்பார்க்க வேண்டாமா?

விவேகமும் வீரமும் இருந்தால் 'நம்ம' சர்க்கார் என்ன செய்திருக்கவேண்டும். எங்கள் மந்திரிகள்மீது புகாரா; இங்கே அனுப்புங்கள் எனப் புகார்களை வாங்கி பூர்வாங்கமாக விசாரணை செய்து, குற்றச்சாட்டுக்களில் உண்மை இருந்தால், சம்பந்தப்பட்டவர்களை வழக்கு மன்றத்தில் ஏற்றி நீதியை நாட்டுக்கு எடுத்துக்காட்டி, சர்ச்காருக்கு ஏற்படும்களங்கத்தை—கட்சிக்கு ஏற்பட்டுள்ள கேவல நிலையைப் போக்கவேண்டுமே ஒழிய, சர்க்கார் தங்களிடமுள்ள தஸ்தாவேஜுகளை அன்னியருக்குக் காட்டுவதும், அதனைச்சட்டசபையில் கேட்டால், அந்தரங்க தஸ்தாவேஜுகள் தேவிடம் தரப்படவில்லை. யுக்தமறிந்தே சர்க்கார் நடந்துகொண்டிருக்கிறார்கள். சில தஸ்

தாவேஜுகளை வைத்துக்கொண்டு சம்பாஷணை நடந்திருக்கலாமேன்றும் பதில் மழுப்பலாகவும், புரியாதது போலவும் பதில் கூறுவது அழகா? விசாரணைக்கு வந்த தோழர் தேவ் அவர்கள் தம்முடன் ஒத்துழைத்து, சர்க்கார் வேண்டியதைத் தந்துள்ளதாகக் கூறியுள்ளார். இதற்கு என்ன சொல்வார்களோ நாமறியோம். சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து தோப்புக்கரணம்போடும் புத்தியை விட்டு, நமக்கு நாமே தீர்ப்பளிக்கும் அறிவும் ஆற்றலும் நம்மிடமுள்ளது என்பதனை ஏனைய நாடுகளுக்குக் காட்டவேண்டாமா?

இப்படி வடநாட்டுத் தலைவர்கள் இங்கே வரும்போதெல்லாம் பார்ப்பனர்கள் சும்மா இருப்பதில்லை. நீரிலிருந்து எடுத்தெறியப்பட்ட மீன்போலத் துடிக்க ஆரம்பித்துவிடுகின்றனர். எங்கள் பிள்ளைகள் படிக்க வசதியில்லை. எங்களுக்கு உத்தியோகமோ படித்தவர்களுக்கெல்லாம் கொடுப்பதில்லை. எங்களைச் சர்க்கார் உயர்ந்த ஜாதிக்காரர் என உணர்ந்துகொண்டனர் என ஓலமிட்டு, ஒப்பாரி வைத்துத் துடிப்பது வழக்கமாகிவிட்டது. அண்மையில் சென்னைக்கு பட்டேல் வந்தபோது, நம் பத்திரிகைகளைப்பற்றிப் புகார்கள் செய்து பார்த்தார்கள். அவரும் சட்டம் இடந்தரவில்லை என்று சொன்னார். சட்டம் இடந்தராவிட்டாலும் 'ஜாமீன்' எனும் கொல்லைப்புறம் இல்லையா? பறிமுதல் என்னும் அணுக்குண்டு இல்லையா? என ஆரியம் தூபம் போட்டு வந்தது. இதனையெல்லாம் நம் தோழர்கள் மறந்திருக்க முடியாது. சில தலைவர்கள் தங்கள் சூழ்நிலைக்குத் தக்கபடி தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கும், பேசும் இடத்திற்கும் தக்கபடி நம்மைத்தாக்கியும், தாக்குவதாகப் போக்குக்காட்டியும் செல்வதுண்டு. ஓரிருவர் தைரியமாக உண்மையை எடுத்துக் கூறுவதும் உண்டு.

குறிப்பாகப் பார்ப்பனர்கள் இத் தலைவர்களிடம் இலேசான முகாரியாகக் கூறுவது, எங்கள் சிறுபிள்ளைகளுக்குப் படிக்கக்கூட வசதியில்லையே என்பது. பின் அடுத்துப் போடுவது இந்த சர்க்கார் மதசார்பற்ற சர்க்காராக இருந்துகொண்டு இன்னும் கம்யூனல் ஜி. ஓ. வை ஒழிக்காதிருப்பது என்பது.

இதனை முன் காந்தியார் வரையில் கூறினார்கள். காந்தியார் சரியான சூடு கொடுத்தார் அப்போது. நீங்கள் மக்கள் சுபீட்சமாக வாழ, பிரார்த்தனை செய்யுங்கள். அதுவே உங்கள் தொழில். அதனை விட்டு விட்டு உங்கள் பிள்ளைகளைக் கல்லூரிக்கு அனுப்ப வேண்டாமென்றார். என்ன இருந்தாலும், யாராயிருந்தாலும், அந்தக் 'கடவுளாகவே' இருந்தாலும் அவர்கள் இனத்திற்கு விரோதமாகத் தீர்ப்புக் கூறினால் சும்மா இருப்பார்களா? காந்தியாரைச் சுட்டுக் கொன்றார்கள். இன்று காந்தியாரைச் சுட்டுக்கொன்றது சுயநல நோக்கமல்ல, பொதுநல நோக்குடன் அப்படிச்செய்தவரை தூக்கிலிட்டால் காந்தியார் ஆத்மா துன்பமடையும் என்றுகூட கூறத் துணிந்து விட்டார்களே! அப்படியில்லாமலா சேலத்திலுள்ள ஒரு பார்ப்பனப் பெண்ணுக்குக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை என்றால், கவர்னர் ஜெனரலுக்கு கடிதம் எழுதுவார்கள்! அவ்வளவு புத்திசாலியான இனம், மந்திரிசபையைச் சோதனைபோட வந்த இந்த நேரத்தில் சும்மா விட்டுவிடுமா? அவரையும் கேட்டுவைத்தார்கள். எங்களுக்குக் கல்லூரிகளில் இடம் கிடைப்பதில்லை என முகாரி பாடியுள்ளனர். அதற்கு முன்னாள் பிரதமர் ஓமந்தூர் ராமசாமியாரைப் பார்த்த மறுநாள் 'ராஜாஜி' மண்டபத்தில் பேசிய தோழர் தேவ், "லட்சாதிலட்சம் நாட்டு மக்கள் ஆரம்பக் கல்விகூட பெற வசதியில்லாது தவிக்கும் நேரத்தில் அதை மனதிற் போட்டுக்கொள்ளாமல், தங்கள் சொந்தப்பிள்ளைகளுக்குக் கல்லூரிகளில் இடங்கிடைக்கவில்லையே என புகார் கூறிக்கொண்டு திரிகின்றனர் சுயநலக்காரர்கள் எனப் பதில் கூறியதுடன் நில்லாது, ஜாதி மத வேற்றுமைகள் மறைந்துபட்டால்தான் ஜனநாயகம் சாத்தியமாகும் என்றும் "பார்ப்பனரோ பார்ப்பனரல்லாதாரோ ஒருவருக்கொருவர் குறை கூறுவது பயனில்லை; கல்லூரிகளில் பார்ப்பன மாணவர்களுக்கு இடங் கிடைப்பதில்லை எனப்புகார் செய்யப்படுகிறது; கல்லூரிகளில் இடங் கிடைக்கவில்லையே என ஏக்கமுற்றுப் பேசுபவர்கள், நாட்டின் நிலையை அறிய முனையவேண்டும். எழுத்து வாசனையற்ற ஏழைகள் லட்சம் லட்சமாக உள்ளனர். அவர்களைக் கவனிக்க வேண்டாமா? அவர்களுக்கு உதவிட வசதிசெய்ய வேண்டாமா? கல்லூரிப்படிப்பைக் காத்திருந்து பெறுவதுதானே" என இடித்து வேறு கூறியுள்ளார்.

இதனை ஆரியர்கள் படிப்பினையாகக் கொள்வார்கள் என நம்புவதற்கில்லை. தலைமையிடங்களில் தங்களுக்குச் சலுகை உள்ளது என்ற காரணத்தினால் தென்னாட்டுத் தலைவர்கள் வடநாட்டுத் தாசர்கள்தான் என்ற உண்மை இருக்கும் வரை, இங்கிருப்பவர் யாராயிருந்தாலும் இவர்களுக்கு எட்ட நின்று உத்தரவு போட 'நம்மவா' அங்கே டில்லியில் இருக்கிறார்கள் என்ற தைரியம் உள்ளவரை இதனை அவர்கள் கைவிடமாட்டார்கள்.

இந்த நிலைமை மாறி நம் நாடு வடக்கே காவடி தூக்குவதை எப்பொழுது கைவிடும்? வடக்கத்தியார் நம் எஜமானர்களாய் ஆகிக்கொண்டிருப்பதை எவ்வளவு காலம்தான நீட்டித்துக்கொண்டிருப்பது? இந்த இறக்குமதி மோகம் என்றைக்குத் தீருமோ? இதுதானே நாம் திராவிட காங்கரஸ் தோழர்களைக் கேட்கும் கேள்வி!

---

(7ம பக்கத்தொடர்ச்சி)

அறமா, அறிவுடைய செயலா, ஜனநாயகத்துக்கு அடுக்குமா என்பதுதான் எனது கேள்வி. ஒரு நாகரீக சர்க்கார் இங்ஙனம் ஜாமீன் கேட்கும் சர்க்காராகயிருந்தால் அதனை ஜமீன்தார் சர்க்கார் என்று ஏன் அழைக்கக்கூடாது என்று கேட்கிறார் ஒரு தொழிலாளி! இவருக்கு என்ன பதில் சொல்லுவதென்றே புரியவில்லை. ஆனால் என்னைப் பொறுத்த வரையில் இவ் விஷயத்தில் நான் ஆச்சரியப்படவேயில்லை. ஏனெனில், இதைவிட இன்னும் பல கொடுமைகளை தமிழர்கள் அனுபவிக்கவேண்டியிருக்கும் என்ற பரந்த திட்டம் போடும் பக்குவத்தை அடைந்துவிட்டவன்நான்,

இந்தப் பத்தாயிரம் ரூபாய் ஜாமீன் திட்டம் பத்திரிகை உலகிற்கு ஒரு சவால்! தமிழர்களுக்கு ஒரு பரிசு! மந்திரிகளின் அரசியல் அறிவுக்கு ஒரு அத்தாட்சி என்றுதான் சொல்லவேண்டும்! இன்னும்சொல்லப்போனால் இந்தப் பரிசு போதாது என்றுகூடச் சொல்லுவேன். உம்! நடக்கட்டும். ஜமீன்தார் ஆட்சி வாழ்க!

"தமிழ் மணி"

★

## வட்டியில்லாக் கடன்.

"யார் செய்த தீவினையோ ஊர் பற்றி வேகிறது!" எப்படியோ 'விடுதலை பத்திரிகையிடம் பத்தாயிரம் ரூபாய் ஜாமீன் வாங்கிவிட்டது காங்கரஸ் சர்க்கார். புகலாகத்தான் ஜாமீன் என்ற வார்த்தை உபயோகிக்கப் பட்டிருக்கிறதே தவிர, இது யானை வாயில் சிக்கிய கரும்பு என்று குதூகலித்துத் தெருத் திண்ணைப் பாரதம் படித்துப் பட்டாபிஷேகம் நடத்துகின்றது மடிசஞ்சி வர்க்கம். 'விடுதலை' கட்டிய பழைய ஜாமீனை விழுங்கி, புதிய ஜாமீன் வாங்கியதை நவீன வரி வசூலிப்புத் திட்டம் என்று மதிப்பிடுவாரும் உண்டு. திராவிட மக்களின் பலாது அபிப்பிராயமோ அலாதி; அபராதமாகவோ, ஜாமீனாகவோ சர்க்காருக்குச் செலுத்தும் தொகை எங்கே போய்விடப் போகிறது? திராவிட பிரதேசத்தில் தானே செலவழியும்? என்பது திராவிடர் பலாது மேம்போக்கான எண்ணம். ஆனால் நான் சொல்வேன் "விடுதலை" பத்திரிகையின் பேரால் திராவிட மக்களிடமிருந்து சர்க்கார் வாங்கியுள்ள தொகை வட்டியில்லாக் கடன் என்று.

* *

## நீதிபதிகள் தீர்ப்பு.

"ராஷ்டிர சக்தி" யுகதர்மா என்னும் பத்திரிகைகளிடம், தலைக்கு ஆயிரம் ரூபாய் வீதம் ஜாமீன் கேட்ட மத்திய மாகாண சர்க்கார் உத்தரவை நாகபுரி ஹைக்கோர்ட்டு நீதிபதிகள் கிழித்தெறிந்த சங்கதியை சென்னை மாகாண சர்க்கார் மறந்துவிட்டதோ என்னவோ! திராவிடர் கழகத்தார் மறக்கவில்லை. சர்தார் படேலை அவுரங்கசீபுக்கு ஒப்பிட்டு அப்பத்திரிகைகள் எழுதியமாதிரி ஒருவரையும் விடுதலை வர்ணித்து எழுதவில்லை. மறைமுகமாகச் சட்டத்தை மீறும்படி ஜனங்களை தூண்டிய அப் பத்திரிகைகளைப் போல 'விடுதலை' எழுதவில்லை. அப்படி எழுதிய அந்தப் பத்திரிகைகளை மத்திய மாகாண சர்க்கார் என்ன செய்து விட்டது? படேலைப்பற்றி எழுதியது சட்ட விரோதமல்ல என்று கூறிவிட்டார்கள் நாகபுரி ஹைக்கோர்ட் நீதிபதிகள். 'தன் கொள்கையை விட்டுக் கொடுப்பதைக்காட்டிலும் அதற்காகச் சிறை செல்வதே மேல் என்று கூறுவது சட்ட விரோதமல்ல' என்றும், 'ஒரு பத்திரிகாசிரியர் தான் அக்கிரமம் என்று கருதும் ஒரு சட்டத்துக்கு, மக்கள் கீழ்ப்படிவதைவிட சிறைசெல்வதே மேல் என்று எழுதுவது ராஜாங்கத்துவேஷம் ஆகாது' என்றும் துள்ளிதமாகத் தீர்ப்பில் சொல்லிவிட்டார்கள் அந்த நீதிபதிகள். அவ்வளவோடில்லை, 'கண்டனத்துக்கான ஆதாரம் இருக்கிறதா? இல்லையா என்பதைப்பற்றிக் கவலை இல்லை; அவ்வாறு ஒரு பிரஜை தன் சொந்தக் கருத்தை கூறுவதை சட்டம் அனுமதிக்கிறது' என்றும் வியக்தமாகச் சொல்லுகிறார்கள் நாகபுரி ஹைக்கோர்ட் நீதிபதிகள்.

* *

## பரிகாரம் தேடவேண்டும்.

நீதியும் நியாயமும் நாகபுரி ஹைக்கோர்ட் மட்டுமே வழங்க முடியும்—சென்னை அதற்கு அப்பாற்பட்டது—என்ற தாத்பர்யத்தோடு, சரித்திரங் காணாத "விடுதலை"யிடம் பெருந் தொகையை ஜாமீனாக வசூலித்துவிட்டது சர்க்கார். திராவிடர் கழகத் தலைவர் விரைவில் இதற்குப் பரிகாரம் தேடியாகவேண்டும். இல்லையேல் மவுண்ரோடு மகாவிஷ்ணுகளின் விஷமம் வளர்ந்துகொண்டே போகும்.

—"நகரதூதன்"

---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

மையான ஒரு சிலர்—பாரத புத்ரர்களை ஏமாற்றிவிட்டதற்காக—கண்ணீர்கூட சிந்துகின்றனராம்.

* *

காங்கரஸ் தலைவர்கள் கண்ணீர் சிந்துவதும்-பாரத புத்திரர்கள் கஷ்டப்படுவதும் ஒரு பக்க மிருக்கட்டும்...நீர் ஏன்? "பாரதபுத்திரர்" என்று ஒரு சாராரை ஒதுக்கி வைத்துப் பேசுகிறீர். பாரத புத்திரர் கோஷ்டியில் சேராத நீங்கள் 'தனி ஆட்சி' நிலவு வேண்டாதவரா...என்று கோபக்குறியுடனேயே நண்பர்கள் பலர் நம்மைக் கேட்பர்!

அரசியின் குழந்தை நிலவு கேட்டு அழுததைப்போல......எல்லாக்குழந்தைகளுமே நிலவு கேட்டு அழுவதில்லை!

இதுபோலத்தான் பாரத புத்திரர்கள் அல்லாத நாம்...... அவர்கள் எந்த மறைமுக நோக்கங்கொண்டு, தனி ஆட்சி நிலவைக் கேட்டார்களோ—அந்த முறையிலும், அளவிலும் நாம் கேட்கவில்லை.

ஒரு குழந்தை நிலவு கேட்டு அழுகிறது என்பதற்காக அந்தக் குழந்தையை குழந்தைகளின் பிரதிநிதியாகக்கொண்டு—எல்லாக்குழந்தைகளும் நிலவு கேட்கின்றன—என்ற முடிவுக்கு வந்துவிடுவது கருத்துடையோர் செயலல்ல.

இந்தியா பிரிந்து செல்லாது... அய்க்கியப்பட்ட "அகில இந்திய தனி ஆட்சி" நிலவு தம் கைக்கு வேண்டுமென்று பாரத புத்திரர்கள் வேண்டினர்.

ஆனால்...நாம் வேண்டியது கிட்டாத அந்த "அகில இந்திய தனி ஆட்சி" நிலவு அல்ல!

இன வாரிப்படி பிரிக்கப்பட்ட இந்தியாவில், தனி ஆட்சி நிலவின் "ஒளி" வீசினால் போதும் என்று எண்ணியவர்கள்...நாம்!

பாரத புத்திரர்கள் வேண்டிய அகில இந்திய தனி ஆட்சி நிலவு கிட்டாதது என்பதை......பாகிஸ்தான் தனி ஆட்சி நிலவு அல்ல... நிலவின் ஒளி விளக்கிவிட்டது!

இனியும் தனி ஆட்சி நிலவின் ஒளி எளிதில் வீசக்கூடிய "திராவிடம்" போன்ற இடங்களை...... "பஞ்சம்,பட்டினி போன்ற மேகங்கள் அகில இந்திய தனி ஆட்சி நிலவை மறைக்கிறது என்று கூறுகிறாயே, இன்னும் சில நேரத்தில் மேகப்படலங்கள் மறைந்துவிடும், அப்பொழுது நிலவைப் பிடித்துத் தருகிறேன்"... என்ற ஏமாற்றுப் பேச்சில் மயக்கிவிட எண்ணுகின்றனர் காங்கரஸ் தலைவர்கள்.

மகுடியின் கீதத்தைக்கேட்டு மயங்கி நின்றுகொண்டிருக்கும் போது, அந்த மகுடியின் கீதத்

ராஜா முத்தையா நூலக அறக்கட்டளை

தின் மறைவிலே... பாம்பு... படமெடுத்து வருகிறதென்பதை—பாரத புத்திரர்கள் அல்லாத நாம் நன்கு அறிந்திருப்பதாலேயே, காங்கரசாரின் கனிவுமொழிக்குப் பின்னே கசையடிபெறும் நிலை மறைந்திருக்கிறது என்பதை உணர்ந்ததோடு மட்டுமல்லாது வெளியேயும் எடுத்துக்கூறுகிறோம்.

ஆனால்... காங்கரஸ் தலைவர்களோ அகில இந்திய தனிஆட்சி நிலவு என்ற பழைய பல்லவியைத் தான் பாடுகின்றனர்.

அவர்கள் இந்தப் பழைய பல்லவியைப் பாடி கிட்டாத பொருளுக்கு ஏங்கி நிற்பது,......... குற்றாலக் குறவஞ்சியிலுள்ள ஒரு பழைய சம்பவத்தை நமக்கு நினைப்பூட்டுகிறது.

வசந்தவல்லி அழகி!

குற்றால நாதர் தினம் வசந்த வீதியில் வலம் வருவதைக் கண்ட அவளுக்கு, குற்றால நாதர்மீது காதல் பிறந்துவிட்டது! இவளோ கணிகை—அவனோ கடவுள்!.... எப்படி இந்தக் காதல் நிறைவேறுவது!...தாதியிடம் கூறவோ வெட்கம்...தாயிடம் கூறவோ அச்சம்! இந்த நிலையில் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்த, வசந்தவல்லிக்கு-கசந்துவிட்டது வாழ்வு! உடல் தேய்ந்துகொண்டிருந்தது—உள்ளம் மாரன் அம்பால் மாய்ந்துகொண்டிருந்தது!.... நேற்று புதிதாகப் போட்ட வளையல் இன்று அவளது கரங்களில் சிரித்து விளையாடுவதில்லை—சினந்து உருண்டோடிவிடுகிறது! நேற்று இருந்த உடற்கட்டுக்குத் தகுந்தாற்போல் தான் வளையல் அணிந்திருந்தாள், ஆனால் இன்றோ உடல் நேற்றைவிட ஒரு சுற்று குறைந்துவிடுகிறது—வளையல் கரத்திலிருந்து ஓடத்தானே செய்யும்!

...நம் காதலுக்காக வசந்தவல்லி ஏங்கித் தவிக்கிறாளே, என்று எண்ணி குற்றால நாதர் வாலிப வேடந் தாங்கி வந்துவிடப்போகிறாரா!...அப்படித்தான் அவர் வந்தாலும், வசந்தவல்லியின் தேய்ந்த உடலைப் பார்த்து......

“கோமளமே” என்றா அழைக்கப்போகிறார். “கோர ரூபமே”என்ற முறையில்தானே அவரின் உரையாடல் துவங்கும்!

* *

வசந்தவல்லி கடைக்கண்அசைந்திருந்தால் போதும்-எத்தனையோ வாலிபர்கள் அவளை வாழ்க்கைத் துணைவியாக்கிக்கொள்ள முன்வந்திருப்பர்.

ஆனால் அவள் யாரையும் விரும்பி அழைக்கவில்லை—குற்றால நாதரைத் தவிர!

குற்றால நாதர் சிலை வடிவிலே-செதுக்கப்பட்டபொம்மைதானே. அவர் எப்பொழுது வருகை தந்து வசந்தவல்லியிடம் இன்பமொழியில் குலவுவது. நாம் சிபார்சு செய்தபடியாவது, ஏதாவது ஒரு வாலிபனை அவள் மணந்திருந்தால் அவள் வாழ்விலே இன்பம் பொங்கும்!

வசந்தவல்லியின் தாயும்—தாதியும் அவள் நிலை அறிந்து நாம் கூறியது போலத்தான்...“குற்றால நாதர் மேல் காதல் கொண்டுவிட்டாளாமே! அவன் என்னடி அப்படி கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்பவனா! வேண்டாமடி இந்த வீண் ஆசை! என் கண்ணுள்ள போதே எவனாவதொருவனைக் கைப் பிடித்து வாழ்க்கை நடத்து என்றுதான் கேட்டனர்.

கேட்டாளா வசந்தவல்லி!

“வாராரோ என்நாதர்—
வந்தெனைச்
சேராரோ காதல்கொண்டு”

...என்றுதான் குற்றாலநாதர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

* *

கிட்டாத குற்றால நாதருக்காக எவ்வளவு ஏக்கம் எத்தனை நாள் தூக்கம் விழித்து துயர்ப் பட்டாளோ—இது போன்றேதான் காங்கரஸ் தலைவர்களும்...பாரத புத்திரர்களும் “அகில இந்திய தனி ஆட்சி” நிலவுக்காக ஏங்குகின்றனர்-மனம் வீங்குகின்றனர்!

மாடிப்படியில் கால் கடுக்க நின்று தேடிப்பிடித்தாள் வசந்தவல்லி-குற்றால நாதரைத் தன் காதலனாக!

இது போன்றே பாரதபுத்திரர்களுக்கு...அகில இந்திய நிலவைப் பிடித்துக்கொடுக்கத் தீவிர முயற்சி செய்கின்றனர் காங்கரஸ் தலைவர்கள்.

அவர்கள் பிரயத்தனப்படும் “அகில இந்திய” நிலவு கிட்டாது!

நாம் முயற்சி செய்யும்...நிலவின் ஒளியை...(திராவிடநாடு)அக மகிழ்வோடு பார்த்தேதீர்வோம்!

காரணம்

நிலவின் ஒளி கிட்டக்கூடியது.

நிலவு-கிட்டாதது......எட்ட எட்ட விலகிச் செல்லும்!

ஆகவேதான் பாரத புத்திரர் அல்லாத நாம் வெற்றிப் பாதையில் வீரநடை போடுகிறோம்!

எங்கள் பயணம் பாரத புத்திரர்களுக்கு ஒரு பாடமாகட்டும்.

வசந்தவல்லி வாலிபனொருவனை மணந்திருந்தால் அவள் வாழ்வு எவ்வளவு வளமுள்ளதாக இருக்குமோ அதுபோல......இந்தியா இனவாரிப்படி பிரிக்கப்பட்டிருந்தால், அந்த பிரிக்கப்பட்ட இடங்களிலே தனி ஆட்சி நிலவின் ஒளி பால்போன்று பொழிந்து கொண்டிருக்கும்.

கிடைக்காத நிலவை வேண்டிய குழந்தை!

கிட்டாத குற்றால நாதருக்கு ஏங்கிநின்ற—வசந்தவல்லி!

ஆகியோரின் நிலையில் பாரத புத்திரர்களை காங்கரசார் இருக்கவிடல் வெட்கம்!

—தங்கவேலர்

## சிங்கப்பூரிலும் சென்னை சர்க்கார்

—[×]—

“திராவிடநாடு” ஏப்ரல் 24ந் தேதி இதழுக்குத் தடை

சிங்கப்பூர் மே 23—“திராவிடநாடு” பத்திரிகையின் 1949 ஏப்ரல் 24ந் தேதியிட்ட பிரதியை (வால்யூம் 7, இதழ் நெ. 43) சிங்கப்பூர் காலனியில் அச்சிடவோ வழங்கவோ கூடாதென்று போலீஸ் கமிஷனர் தடுத்திருப்பதாக நேற்றைய கெஜட் அறிவிப்பொன்று கூறுகிறது.

—தமிழ் முரசு, சிங்கப்பூர்.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

கையைத் திருப்பிக் கொடுத்திருக்க வேண்டாமா இந்த அரசாங்கம்? ஆளவந்திருப்பவர்களுக்கு நிலைமையைச் சீர்தூக்கிப் பார்க்கும் போக்கு இருந்திருந்தால் இதைத் தான் செய்திருப்பார்கள். ஆனால் இன்று நடந்திருப்பதென்ன?

"விடுதலை"க்கு ஜாமீனாக முன்னர் கட்டியிருந்த ரூபாய் 2000த்தையும் பறிமுதல் செய்துவிட்டு மீண்டும் 10,000 ரூபாய் ஜாமீன் கட்டவேண்டும் என்று கேட்டிருக்கிறது இந்த அரசாங்கம். "குதிரை ஆளைக் கீழே தள்ளியது மல்லாமல் குழிவேறு பறித்தது" என்பதைப்போல் இருக்கிறது இந்த ஜாமீன் பறிமுதலும், புதிய ஜாமீன் கோரிக்கையும். உண்மையிலேயே அந்த ரூபாய் இரண்டாயிரத்துக்கும் பேசும் சக்தி இருந்திருந்தால், ஆளவந்தார்களே! எங்களை அநியாயமாக அபகரிக்காதீர்கள். பணக்காரர்களின் இரும்புப் பெட்டிகளிலோ அல்லது பாங்குகளிலோ தூங்கிக்கிடந்தவர்கள் அல்ல நாங்கள்; ஏழையும் பாட்டாளியும் சிந்திய இரத்தம். உழைப்பாளிகளின் உடம்பிலிருந்து கொட்டிய வியர்வைத் துளிகள் நாங்கள்" எங்களைப் பறிமுதல் செய்யாதீர்கள் என்று கூறியிருக்கும். பாவம்! பேசும் சக்தியற்ற பணம் இந்த அநியாயக்காரர்களின் செயல் கண்டு சலசலவென்று சிரித்திருக்கும்.

"விடுதலை" மீண்டும்பத்தாயிரம் புதுஜாமீன் கட்டவேண்டுமென்றும் முன்னர் கட்டியிருந்த ரூபாய் 2000 பறிமுதல் செய்துவிட்டதாகவும், இதற்குக் காரணம் இந்தப் பத்திரிகையின் போக்கு தவறானது என்றும் இன்றைய சர்க்கார் கூறுகிறது. "விடுதலை" இழைத்திருக்கும் தவறு பத்திரிகை உலகத்திற்குப் புதிதல்ல. "விடுதலை" விஷயத்தில் எந்த வகுப்புவாத உணர்ச்சி குற்றமாகக் கருதப்படுகிறதோ, அதே குற்றத்தைப் பிற பத்திரிகைகளும் செய்திருக்கின்றன." என்று நிலைமையை விளக்கிக்காட்டி "விடுதலை" குற்றமற்றது என்று வாதாடுகிறார் "தினசரி"யார் விடுதலையின் ஜாமீன்கோரிக்கைக்குப் பணம் அனுப்புவதின் மூலம் "விடுதலை"யின் கொள்கை சரியானது அதை நாங்கள் வரவேற்கிறோம் என்று மக்கள் கூறுகிறார்கள். அதுமட்டுமல்ல "விடுதலை"யின் உழைப்பு நாட்டு நலனுக்கும், மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கும், குறிப்பாகஜனநாயக வளர்ச்சிக்கும் இன்றியமையாதது என்று திராவிட சமுதாயம் முழங்குகிறது. "விடுதலை" திராவிட சமுதாயத்தின் வீரப் பிரதிநிதி. அது எங்கள் உயிருக்கு மேலாக நாங்கள் போற்றி வளர்க்கும் ஒப்பற்ற ஏடு. ஆகவே அதை அழிக்க முற்படுவீராயின் எங்கள் உயிரை கொடுத்தேனும் அதைக் காப்பாற்றியே தீருவோம் என்று நான் கூறுகிறேன். இந்த இடத்தில் ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையில் அதிகமான பேதங்கள் வளர்ந்துவிட்டன என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆளவந்திருப்பவர்களின் அடக்குமுறைச் செயல்களையும் பாசிசப் போக்கையும் மக்கள் விரும்பவில்லை. எனவே திருந்துங்கள் அல்லது ஆட்சி பீடத்தை விட்டு வெளியேறுங்கள் என்று எச்சரிக்கிறேன்.

ஆளவந்தார்களே! உங்களின் செயல் கண்டு நீதியும் நேர்மையும் வெட்கப்பட்டு எங்கேயோ ஓடி மறைந்துவிட்டது. ஜனநாயகம் உங்கள் ஆட்சியில் வெறும் கேலிக் கூத்தாக்கப்பட்டுவிட்டது. உங்களை ஆதரித்து ததாஸ்துக் கூற எண்ணற்ற ஏடுகள் உங்கள் கையில் இருக்கின்றன. உங்களது நேர்மையற்ற செயல்களையும், பொறுப்பற்ற போக்கையும், உலக மக்களின் கண்களுக்குத் தெரியாமல் அவைகள் இருட்டடிப்பு வேலைகள் செய்துவருகின்றன. உங்களது திரைமறைவு இரகசியங்களையும், ஒரு குலத்துக்கு ஒரு நீதி வழங்கும் ஓரவஞ்சனைப் போக்கையும்மக்களுக்கு எடுத்துக் காட்டி கண்டிக்கிறது "விடுதலை." விடுதலையின் பேனாமுனைக்குப் பதில் சொல்ல யோக்கியதையற்ற தென்னிந்திய பத்திரிகையாளர்கள்—தங்களை எழுத்துலக மேதைகள் என்று விளம்பரப்படுத்திக் கொண்டு திரியும் வீணர்கள்—விடுதலை திராவிடநாடு ஆகிய பத்திரிகைகளை மஞ்சள்பத்திரிகை என்று கூறி, அதன்மீது நடவடிக்கைஎடுத்துக்கொள்ளவேண்டும் என்று பத்திரிகையாளர் மாகாட்டில் பேசினார்கள்—தீர்மானம் செய்தார்கள். இந்தப் பிரகஸ்பதிகளின் பேச்சைக் கேட்டுக்கொண்டுதான் சர்க்கார் இந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்றும் தெரிகிறது. இது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

திராவிடர்கழகப் பத்திரிகைகளை மஞ்சள் பத்திரிகை என்று கூறி அதன்மீதுநடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பத்திரிகையாளர் பெடரேஷன்மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். இவர்கள்—பத்திரிகை எழுத்தாளர்கள் என்று வெட்கமில்லாமல் கூறிக்கொண்டிருக்கும் யோக்கியர்கள்-ஏன் இந்த கேவலமான வழியைப்பின்பற்ற வேண்டுமென்று கேட்கிறேன். ஆரியத்திற்குப் பழக்கப்பட்ட இந்தக் கோணல் வழியும் குறுக்குப் புத்தியும்தான். உண்மையில் இவர்கள் தங்களை எழுத்தாளர்கள் என்று கூறிக்கொள்ள யோக்கியதை உடையவர்களானால் "விடுதலையின் எழுத்துக்களுக்கு மறுப்பு எழுதட்டும். அது காட்டும் புள்ளி விவரங்களிலோ, கொள்கையிலோ தவறு இருந்தால் மக்களிடம் எடுத்துக் கூறட்டும். மக்கள் தங்களின் அறிவைக் கொண்டு விஷயங்களைப் பரிசீலனைசெய்து முடிவு கட்டிக் கொள்ளட்டும். இதற்கு யோக்கியதை இல்லாவிட்டால் தங்களின் பேனாக்களை எங்காவது வீசி எறிந்துவிட்டு வேறு ஏதாவதுதொழில் பார்த்துக்கொள்வார்களாக. பாவம்! அவர்களைச் சொல்வதிலும் குற்றமில்லை. புல்லேந்தும் கையைப் பேனாப் பிடிக்க விட்டுவைத்திருப்பதே மிகவும் பெரிய தவறு. இந்தத் தவறை உணர்ந்து மக்கள் சரியான நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களாக. புல்லேந்தும் புல்லர்களின் போக்கை புன்சிரிப்புடன் வரவேற்பீர்களாயின் ஆட்சி பீடம் ஆட்டங்கொடுத்துவிடுமென்று ஆளவந்தார்களுக்கு எச்சரிக்கிறேன்.

பொதுமக்களே! "விடுதலை" முன்னர்க் கட்டியிருந்த ரூ 2000-த்தையும் பறிமுதல் செய்துவிட்டு மீண்டும் 10,000 புதிய ஜாமீன் கேட்டிருப்பது மிகப் பெரிய தவறு என்று இந்த அரசாங்கத்தின்மீது குற்றம் சாட்டுகிறேன். ஜாமீன் பறிமுதல், புது ஜாமீன் கோரிக்கை ஆகியவைகளின்மூலம் ஏழைப்

ஜா முத்தையா நூலக அறக்கட்டளை

பாட்டாளி மக்களின் இரத்தத்தை உறிஞ்சுகிறது. உழைப்பாளிகளின் உழைப்பை இந்த அரசாங்கம் பறிமுதல் செய்துவிட்டு, இன்னமும் தன்து பலி பீடத்திற்கு 'காவு' கேட்கிறது என்று குற்றம் சாட்டுகிறேன். "தினசரி"யார் கூறியிருப்பதுபோல பத்திரிகா சுதந்திரத்தை படுகொலை செய்துவிட்டதென்று குற்றம் சாட்டுகிறேன். அதுமட்டுமல்ல உயரிய ஜனநாயகத்தையே குழிதோண்டிப் புதைக்கிறதென்று குற்றம் சாட்டுகிறேன். இந்த குற்றச்சாட்டுகளுக்கு அரசாங்கம் பதில்சொல்லியே தீரவேண்டும். நான் சாட்டியிருக்கும் குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்திலில்லை, மக்களின் மன்றத்தில்தான். இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப்பதில்கூறும்படி ஆளவந்தார்களை மக்கள் வற்புறுத்துவார்களாக. குற்றவாளி நாங்களா? அல்லது அரசாங்கமா என்பதை மக்கள் கண்டறிந்த நல்லதொரு தீர்ப்பு நல்குவார்களாக.

நெஞ்சிலே நேர்மையும், உள்ளத்தில் உறுதியும் படைத்த எந்த மனிதனும் இன்றைய அரசாங்கத்தின் படுபாதகச் செயலைக் கண்டித்தே தீருவான். ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு அதன்மீது பாசீச அரசமைக்க முயற்சிக்கும் இன்றைய ஆளவந்தார்களின் போக்கை ஒவ்வொரு மனிதனும் எந்தெந்த வகையில் கண்டிக்க முடியுமோ அத்தனை வழிகளிலும் கண்டிப்போமாக. திராவிடநாட்டு மக்களின் முன்னேற்றத்தையும், விடுதலையையும் குறிக்கோளாகக் கொண்டு உழைக்கும் திராவிடர் கழக அதிகாரபூர்வமான பத்திரிகையான "விடுதலை"மீது அரசாங்கம் கேட்டிருக்கும் ஜாமீன் தொகைக்குப் பண உதவி செய்வதன்மூலம் நமது கடமையை நிறைவேற்றுவதோடு, ஆளவந்தார்களே! உங்கள் அநீதியைக்கண்டு எங்கள் உள்ளம் குமுறுகிறது, உங்கள் ஆட்சிக்கு அழிவுகாலம் கிட்டுகிறது என்று எச்சரிப்போமாக.

—புத்ததாசன்

# புண்ணியக் கிரியைகள்!

★

திராவிட மக்களின் பலவீனத்தையும் அறியாமையையும் முதலீடாக்கி, தங்கள் சுயவியாபாரத்தை-பகற்கொள்ளையைவிடக் கொடிய வியாபாரத்தைப் பெருக்க திட்டம் தீட்டினர், பார்ப்பனர்கள்! அதன்படி மக்களை ஏய்க்க "அடுத்த உலகிலே அற்புதப் பதவி" என்று ஏலம் கூறினர்—சாவைக்கண்டு அஞ்சி நடுங்கிய மக்களுக்கு "சாவுக்குப்பின் அமரத்வம்" என ஆசை காட்டினர். "இந்த உலகிலே இன்பம் இருக்கிறது—அதைப்பெற வழி தேடுவீர்கள்" என்று அவர்கள் சொல்லியிருப்பார்களேயானால், அவர்களது பித்தலாட்டங்கள்—சூதுச் செயல்கள் அனைத்தும் என்றோ அழிந்து, மண்ணுடன் மண்ணாய்ப்போய் மக்கி மடிந்திருக்கும். அப்படிக் கூற அவர்களுக்கென்ன பைத்தியமா?

இந்நாட்டிலே அரைவயிற்றுக் கஞ்சிக்கே திண்டாடும் பாமரமக்களைப்பார்த்து "அடுத்த உலகிலாவது நல்ல பதவி பெறுவீர்கள்" என்ற நம்பிக்கையை ஊட்டி, தங்களுடைய சுரண்டும் சதித்திட்டத்திற்கு அவர்களைப் பயன்படுத்திக் கொண்டனர்—ஏய்த்துப் பிழைப்பதிலே ஏற்றம் பெற்றனர்.

"தேவருலகிலே அமரனாக வாழ, புண்ணியம் செய்!—புண்ணியம் செய்!" இதுதான் அவர்கள் இந்த நாட்டு மக்களிடம்—அறியாமையிலுழன்றுகொண்டிருந்த மக்களிடம் செய்த பிரச்சாரம்!

இந்த சூதுச் செயலை எடுத்துக் காட்ட புண்ணியக் கிரிகைகள் என்றால் என்ன என்பதை விளக்கிக் கூறத்தான் இக் கட்டுரை!

இனிப் படியுங்கள்!

"விளக்கிடல் தீர்த்தம், வெண்ணீருத் திராட்சம், புத்திரன் பார்ப்பான், புராணகீர்த்தனை, அருச்சனை அச்சரம்" என்பவற்றுள்.........

திருவிளக்கு:

சிவாலயத்தில பிரதட்சணமாக வந்துவிளக்கில்நெய்யூற்றி, தாமரை நூல் போட்டுத் தீபம் ஏற்றிவைத்தவருக்கு சொர்க்கத்திலே இடம் கிடைக்குமாம்!

ஒரு நிகழ்ச்சி புராணத்திலிருந்து!

மேற்கூறியவாறு ஒரு பக்தன் திருவிளக்கேற்றி வைத்துவிட்டுப் போனபிறகு, அவ் விளக்கு நள்ளிரவில் அணையுந்தருவாயை அடைந்துகொண்டிருந்தது. அந்த நேரத்தில் அதிலுள்ள நெய்யைத் திருட வந்த எலியின் கால்களிலொன்று திரியின்மேல் படவே திரி தூண்டப்பட்டு மிகவும் பிரகாசமாய் எரிந்ததாம்! உடனே சிவனார் மனம் மகிழ்ந்து அந்தத் திருட்டு எலியை மாபலிச் சக்ரவர்த்தியாக்கி மூவுலகையும் அரசாள வரங் கொடுத்தாராம்!

இது எனது சொந்தச் சரக்கல்ல, புராணத்திலிருந்து எடுத்துக் கூறுகிறேன் என்று மற்றுமோர் முறை உங்களுக்கு நினைவுப்படுத்துகிறேன்.

சிவனுக்கென ஏற்றிவைக்கப்பட்ட திருவிளக்கில் நெய் திருடப்போன எலிக்கு மூன்று லோகம் கிடைத்தது உண்மையாயிருப்பின், அந்தத் திருவிளக்கை ஏற்றிவைத்தானே சிவ பக்தன்—அனுதினமும் சிவ நாமம் பஜிக்கும் சிவநேசன், அவனுக்குக் கிடைத்த பதவி என்னவோ? களவாணித்தனத்திற்குத்தான் சிவனார் ஆக்கம் அளிப்பார் போலும்! கோவிலில் உள்ள கோவிற் பெருச்சாளிகளான பார்ப்பனப் புரோகிதர்கள், விக்கிரகங்களின் மீதுள்ள நகைகளை 'ஹம்பக்' செய்துகொள்ளுவதும், சொர்க்கத்துக்குப் போகத்தானோ என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. வெகுசுலபமான வழியிலே புண்ணியம்பெற, எல்லோரும் இதுபோன்ற முறையைக் கையாளாது மெய் வருத்தப்பட்டு வேறு கடின வழிகளை—விரத அனுஷ்டானங்களைத் தேடுவது எவ்வளவு மதியீனம்! ஆறறிவு படைத்த மனிதனும் அய்ந்து அறிவு படைத்த சிற்றெலியும் ஒன்றாக 'சீட்' பெறுகிறார்களாம் மோட்ச லோகத்திலே! இருவருக்கும் வித்தியாசமே கிடையாதுபோலும்! சிந்திக்கவல்லோர்

கேட்டால், மேல்நாடுகளிலுள்ள "அராபியன் நைட்" கதைகளும், 'ட்ரோஜன் யுத்தம்' கதைகளும் எவ்வளவோ மேல் என்று எண்ணி எண்ணுகின்ற நேரத்திலேயே காரித் துப்புவரே புராணங்களின் மீது!

**புண்ணிய ஸ்தலம்:**

சில இடங்களைத் தெய்வங்களின் விசேஷ இடங்களாகக் கருதி அவ்விடங்களுக்கு ஸ்தல யாத்திரை போவார்கள், இதனை விசேஷித்த வைதீகனென என்னும்—இந்துமதத்தைப் பின்பற்றி வரும் பக்தகோடிகள்! உலகில் வாழப்பிறந்த ஒவ்வொரு மனிதனும் அவன் வாழ்நாளில் ஒருமுறையாவது ஸ்தல யாத்திரை செய்தாக வேண்டும் என்ற குருட்டு முறையை ஏற்படுத்திவிட்டார்கள், மதப் பாதுகாவலாளர்கள்!

இத்தகையஸ்தலங்களில் ஒன்றுதான் காசி!

ஒருசமயம் சிவன், பிரம்மாவின் காமாந்தகார லீலைகளைக் காணப்பெறாதவராய், பிரம்மாவின் தலையைக் கொய்தபொழுது அந்தத் தலை சிவனின் கையில் ஒட்டிக்கொள்ளவே, சிவன் பிரம்மகத்தி கொண்டு பல இடங்களிலும் அலைந்து திரிந்து, பல ஸ்தலங்களைத் தரிசித்தும் வருகையில் காசிக்கு வந்தவுடனேயே அந்தப் பிரமகத்தி நீங்கி பிரம்மாவின் தலையும் கீழே விழுந்ததாம்! கங்கைநதி தொடங்கிப் பஞ்சகோசி சாலை வரையிலும் புண்ணிய ஸ்தலம் என்று கருதப்படுகிறது. இந்த புண்ணியஸ்தலம் சிவனுனுடைய சூலாயுதத்தின் முனையில் நிற்கிறதாம்! இந்த எல்லைக்குள் இறந்துபோகும் இந்துக்களுக்கு மட்டுமன்றி, மகமதியர்களுக்கும், கிருஸ்துவர்களுக்குங்கூட சொர்க்கம் கிடைக்குமாம்!

இந்தப் புனித ஸ்தலத்தின் புராண வரலாறு இதுதான்.

சிந்தனையற்று, சிந்திக்கத் தெரியாது, பொட்டுப் பூச்சிகளாய் வாழும் மக்கள் இதனை நம்பி வெகு தொலைவிலிருந்தெல்லாம் காசி, காசியென்று கால்கடுக்க ஓடோடிவந்து, அங்குள்ள பூசாரிகளுக்கு நிறையப் பொருட்களைக் கொடுத்து அவர்களது செல்வத்தை மென்மேலும் பெருக்குகிறார்கள். இந்த ஏற்பாட்டின்மூலம் பொருளாதாரத்தில் உயர்ந்தவர்கள்தான்—வாழ்க்கை முறையில் ஏற்றம் பெற்றவர்கள்தான் அங்குள்ள பூசாரிகள்! ஆனால்......இன்றோ மக்கட் குலத்தில் சிந்தனைவிழிப்பு ஏற்பட்டிருக்கிறது-புரோகித வர்க்கத்தின் கபட நாடகம் அம்பலத்திற்கு வந்துகொண்டிருக்கிறது. பிறரை ஏமாற்றித் தான் ஏற்றம் பெற எண்ணுகிற சுயநலச் சூரர்களான புரோகிதக் கும்பலுக்கு சாவுமணியடிக்கவேண்டும் என்று முழக்கமிட்டு சிந்தனையாளர்கள்—பகுத்தறிவுவாதிகள்—சீர்திருத்தக்காரர்கள் சொல்லாலும் செயலாலும் மக்கள் சமுதாயத்திலே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகிறார்கள். இது மறுமலர்ச்சி காலம்—அறிவு வளர்ச்சி பெற்று வரும் காலம்! எனவே, இனி காசி ஒரு சாதாரண காசியாகப்போகும் நாள் வெகு தொலைவிலில்லை!

மற்றொன்று பூரி அல்லது ஜெகந்நாதம் எனப்படும் ஸ்தலம்!

இங்குள்ள கிருஷ்ணன் கோவில் மிகவும் விசேஷமானதாம்! கிருஷ்ணனை மானென்று எண்ணிய ஒரு வேடனால் கிருஷ்ணன் அம்பெய்யுண்டு உயிர் துறந்தான். இறந்துபோன கண்ணனுடைய எலும்புக்குவியல் பல நாள் அவன் உயிர்நீத்த மரத்தடியிலேயே கிடந்தது! அதனைக்கண்ட ஒரு பக்தன் அவைகளை எடுத்து ஒரு பெட்டியில் வைத்துப் பத்திரப்படுத்தினான். இந்திரத்தும்மன் என்னும் ஓர் அரசனுக்கு ஒரு கிருஷ்ண விக்கிரகம் செய்யும்படியும், அந்த எலும்புத்துண்டுகளை அதனுள் வைக்கும்படியும் உத்திரவாயிற்று. அம்மன்னனும் விசுவகர்மாவின் உதவியை வேண்டி நின்றான். விசுவகர்மாவும் ஒரு நிபந்தனையின்பேரில் ஒப்புக்கொண்டான். அதாவது, விசுவகர்மா வேலைசெய்யும் காலத்தில் அவனுடைய வேலை விஷயத்தில் குறுக்கிட்டு அவனை அலட்டித் தொந்திரவு செய்யக்கூடாது என்பதே அந்த நிபந்தனை. மன்னனும் ஒப்புக்கொண்டான், வேலையாக வேண்டுமேயென்று! சில நாட்களுக்குப்பிறகு அம்மதிகெட்ட மன்னன் தனது வாக்குறுதியை மறந்து, அவனிடம் சென்று, விக்கிரகம் எவ்வாறுளது என்று கேட்டபொழுது, அந்த தேவ சிற்பி கோபங்கொண்டு, கைகால் இல்லாத, அவலட்சணமான ஒரு சொரூபத்தை செய்துகொடுத்தானாம்!

இதுதான் அந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தின் புனித வரலாறு!

அந்தக் கோவிலில் எங்கு திரும்பிப்பார்த்தாலும் பரந்தாமனுடைய காமாந்தகார லீலைகளைச் சித்திரிக்கும் அவலட்சணமான உருவங்கள் வரையப்பட்டிருக்கும்! இங்குள்ள பண்டாக்கள் என்னும் குருக்களின் 'கமிஷன் ஏஜண்டுகள்' பிள்ளைவரம் தேடிவரும் பக்தர்களிடமும், தீராத நோய் தீருமென்று எண்ணிவரும் பக்த சிகாமணிகளிடமும் பலவிதச் சடங்குகள் செய்யவேண்டுமென்று கூறிப் பணம் பறிப்பார்கள். இது இன்றும் நடைபெற்று வருகிறது. பரந்தாமனின் புண்ணியபூமியிலே! இதுமட்டுமல்ல, இராமேசுவரம், திருப்பதிபோன்ற மற்ற புண்ணிய ஸ்தலங்களிலும் இப்படிப்பட்ட மோசடிச் செயல்கள் ஏராளமாக நடைபெறுகின்றன. இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு அந்த இருண்ட அறையிலேதான் பல ஆயிரம் வருடங்களாக அடைந்து கிடக்கின்றன, அந்தப்பாழும் தெய்வங்களும்!

இந்தப் பூரிக்ஷேத்திரமெல்லாம் ஒரு காலத்தில் சுவர்ணமயமாயிருந்ததென்றும், அங்குள்ள மணல் எல்லாம் தங்கமயமாயிருந்ததென்றும், கலியுக தோஷத்தால் பாவிகளின் கண்களுக்கு அந்தத் தங்க மணல் வெறும் மணலாய்த் தென்படுகிறதென்றும் அளப்புகள் அளப்பார்கள், அங்கிருக்கும் ஜடாமுடிகள்.

அதுமட்டுமன்றி பல இடங்களிலிருந்து பசியோடும் களைப்போடும் வரும் யாத்திரீகர்களிடம், "நீங்கள் இவ்விடத்தில் சமையல் செய்து சாப்பிட்டால் புண்ணியமே கிடைக்காது" என அங்குள்ள குருக்கள்கூறி அவர்களை நம்பவைத்துவிடுவதுமுண்டு! இந்த தகிடுதத்தத்தை—தெய்வீக அளப்பை, பழமை விரும்பிகள், காமத்தை பூஜிக்கும் பேயர்கள், கண்டவற்றிற்கு மண்டிபோடும் ஆட்டு மந்தைகள், அநாகரீகக் கற்பனைகளை—புராணப் புளுகுகளைப் போற்றிப்பாடும் பித்தா பிறைசூடியின் தாசர்கள், இந்த அநாகரீகக் கற்பனைகளை நம்பி, அபக்குவமாய் சமைக்கப்பட்ட கோவில் பிர

சாதங்களை அதிக விலைகொடுத்து வாங்கிச் சாப்பிட்டு, கொடிய விஷபேதிகளால் தாக்கப்பட்டு அந்தப் புண்ணிய பூமியிலேயே பரந்தாமன் திருவடிகளை அடைவதுமுண்டு! ஆனால் புரோகித வர்க்கம் தயாரித்துப் பரிமாறுகிற பிரசாதங்களின் வண்டவாளங்களை நன்கு அறிந்தவர்கள் அவற்றை வாங்கி உண்ணமாட்டார்கள்! பஞ்சாமிர்தம் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது என்பதை பழனிக்குச் சென்றுபாருங்கள். நான்கு, அய்ந்து பார்ப்பனர்கள் கோவணத்தைக் கட்டிக்கொண்டு, வியர்வை உடலிலிருந்து கீழேவிழ பழம், கற்கண்டு, பேரீச்சம்பழம், நெய்போன்றவற்றைஒன்றாகக்கலந்து மிதித்து துவைக்கும் ஆபாசக் காட்சியினைக் கண்டாலே போதுமே! பத்து நாட்களுக்குச் சாப்பிடவே மனம் வராது! இதனை அறியாதார் அனுபவித்த பலனை நமக்கு, காசி நகரத்தின் வழியோரங்களில் கழிந்து கிடக்கும் எலும்புக் குவியல்கள் தெரியப்படுத்தும்.

இவ்வாறாக தங்களை மனிதனென பறைசாற்றிக்கொள்ளும் மானிடப் பதர்கள், உலகைப் பார்ப்பதில்லை — உண்மைகளை உணர்வதில்லை-விஞ்ஞானம் முன்னேறி அணுக்குண்டு தோன்றுவதை, அறிவு விரிவடைவதை, ஆராய்ச்சிகள் பெருகி செவ்வாய்க் கிரகத்திற்கு வழிகண்டுபிடிப்பதை, சரித்திரம் மாற்றியமைக்கப்படுவதை, "மனிதராய் வாழ்வோம் வாரீர்!" என பகுத்தறிவிபக்கம் உரிமைக் குரல் கொடுத்து துந்துபி முழக்கம் செய்வதை இவர்கள் காண்பதில்லை - கேட்பதுமில்லை; கேட்டாலும் இந்த மரமண்டைகளில் அவை ஏறுவதுமில்லை!

கட்டிய மனைவியிருக்க தினைப்புனத்தே வள்ளியைக்கண்டு மோகித்து, சரசசல்லாபம் நடத்தின சுப்பிரமணியனையும், கோபிகாஸ்திரீகளுடனே கொஞ்சிக் குலவி காமாந்தகார லீலைகள் நடத்தின கிருஷ்ணனையும், குடும்பப் பெண்கள் வழிபட மனமொப்பார்கள் என்பதனை இந்த புத்திமான்கள் அறியார் போலும்! யாத்திரை வருகிற அநேக பெண்களை அவ்விடத்திலுள்ள குருக்கள், பூசாரிகள் முதலானோர்களுடைய 'ஏஜண்டுகள்' மோசம்பண்ணி அவர்களைச் சிறைப்படுத்தி குருக்களிடம் கொண்டு விடுவர். அவர்களும் (சமீபத்தில் தருமபுர ஆதீனம் செய்ததாக வழக்குமன்றம் ஏறியிருக்கும் அயோக்கியசெய்கை போன்று) தங்களது இச்சையைப் பூர்த்தி செய்துகொண்டபிறகு சிலரைமட்டும் வைத்துக்கொண்டு மற்றவர்களை விரட்டிவிடுவார்கள். தங்கள் மனைவிகளைப் பறிகொடுத்த புராண விசுவாசிகளோ, வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அங்குள்ள புண்ணிய குளங்களிலேயே விழுந்து உயிர் துறப்பதுமுண்டு. இவ்வளவு அநீதிகளும் அக்கிரமங்களும் எங்கே நடக்கின்றன தெரியுமா? —பரந்தாமனின் புண்ணிய பூமியிலேதான்! ஆம்!......... அங்குத் தெய்வீகசன்னிதானத்திலேதான்!

இனி யாத்திரையின் வரலாற்றைப்பற்றி சிறிது ஆராய்வோம்! யாத்திரையில் ஸ்நான யாத்திரையும், ரத யாத்திரையும் விசேஷித்தவைகள்.

(தொடரும்)

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வரச் செய்தாலொழிய அவர்களது ஆத்மா சாந்தியடையாதென்பதை ஒருங்கே லக்ஷ்யத்தக்கொண்டு அவ்வாறே நடந்து வருகின்றனர். மனிதன் இறந்தபின் அவனது ஆத்மா பிரிந்து மேலுலகம் செல்கின்றது (Resurrection) என்ற கொள்கையினாலேதான் சரீரத்தை அடக்கம் செய்யும் விதங்களில் பலவித விவகாரங்கள் கிறிஸ்துவ நாடுகளில் கிளம்பியிருக்கின்றன. உயிரோடிருக்கும் மக்கள் கஷ்டப்பட்டிருக்க, எத்தனையோ கோடிப் பொன் சமாதிகளிலும், இறந்தவர்களின் ஞாபகார்த்தமாகக் கட்டும் கோபுரங்களிலும் வீணாகச் செலவிடப்பட்டு வருகின்றது. ஜனங்கள் குடியிருக்கவே இடம் கிடைக்காத ஊர்களிலும், சமாதிகளுக்காக எவ்வளவோ விஸ்தீரணமான இடங்கள் விடப்பட்டு வீணே கிடக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க ஏராளமான பணவிரயம் ஆவதோடு அவ்வித மயானங்களால் மக்கள் ஆரோக்கியத்திற்கே கெடுதியும் ஏற்படுகின்றது. முகமதிய நாடுகளில் பிணங்களின் மேல் எத்தனையோ பெரிய சிங்காரமான கோரிகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அவைகள் மிகத் தேர்ந்த சிற்பவேலைத் திறனைக் காண்பிப்பதாயினும், எத்தனை கோடி மக்களின் இரத்தத்தின் சத்தை வீணாக்கியிருக்கின்றன வென்பது கவனிக்கத் தக்கதாகும். ஈஜிப்ட் தேசத்திலுள்ள சமாதிகள், கோபுரங்கள் முதலியவற்றை அமைக்க எத்தனை அடிமை (Slaves) களின் நெற்றிக் கண்ணீர் நிலத்தில் பாய்ந்திருக்கவேண்டும்! ஈமச்சடங்குகள் செய்வதாலும், கருமாதி சமாராதனைக் கிரியாதிகள் நடத்துவதாலும் எத்தனை இந்தியக் குடும்பங்கள் குடிக்கக் கஞ்சியில்லாமல் அலைகின்றன? செத்தவர்களால் ஏற்படும் சகியாத் துயரத்தைவிட, அவர்களின் கருமாதிக்காகக் கடன்பட்டுப் பின்உயிருள்ள அளவும் மீளாத் துன்பத்திலழுந்தும் துயரம் பெரிதாகத் தோன்றுகின்றது. ஹிந்துக்கள் செய்யும் கருமாதிச் சடங்குகளை நேரில் காணாதவர்களுக்கு அவைகளைப்பற்றி விரித்துக் கூறின் அது சிறிதும் நம்பத்தகாத ஆபாசமாகவே தோன்றும். பிணத்திற்குத் தீ மூட்டுவதற்குமுன், அதன் ஆத்மாகஷ்டமின்றிப்பிரிந்து போகவேண்டிய வசதிகள் முதலில் செய்யப்படுகின்றன. சாந்திக்காக வாய்க்கரிசி சமைத்துப் படைக்கப்படுகின்றது. தவிர "கோடி வஸ்திரம்" என்பதாக நல்ல வஸ்திரமாவது, இல்லாவிடின் ஏதோ ஒரு புதிய மஞ்சள் துணியாவது அப்பிணத்திற்குக் கட்டப்படுகின்றது. மீண்ட ஆத்மாவிற்குப் பாலமுதளிக்கப் பசுக்களைக் கோதானமாகக் கொடுக்கப்படுகின்றது. ஆதியில் "சககமனம்" என்ற பெயரால், இறந்த கணவனோடு அவனது உயிருள்ள மனைவியையும், அவன் தனிமையைத் தீர்த்து அவனுக்கு எங்கும் சுகமளிக்குமாறு ஒருங்கேவைத்துக் கொளுத்தப்பட்டுச் சித்ரவதையும் செய்யப்பட்டது! தற்காலத்தில் ஆண் மக்களனைவரும் மீசையை எடுத்துவிடவேண்டும்! மனைவியர் தலை மொட்டையடிக்கப் படவேண்டும்; அவ்வாறு செய்வதற்குக் காரணம் அவனது மனைவிமார் அழகைக் குலைத்துக் கற்புக்குப் பங்கம் வாராமற் காப்பதொன்று, இரண்

டாவதாக அவனது ஆத்மா சிரமமின்றி சுவர்க்கலோகம் சேர்வதற்கு ஒரு மயிர் ஏணி ஏற்படுத்துவதற்குப ஆம்!

அந்த ஜீவாத்மா சில நாட்கள் வரையிலும் பூமியில் சஞ்சரித்த முக்கியமான இடங்களுக்குச் செல்கிறதாம்; அதன் நிமித்தம் பல விதப் படைப்புகள் போட்டு அதன் சாந்திக்காக பூஜை செய்யவேண்டுமாம்! கருமாதிவருடாந்திரபூஜைக் காலங்களில்படைக்கப்படும் போஜனத்தின் ஒரு கைப்பிடிச்சாதத்தை காகம் சாப்பிடவேண்டியது அத்தியாவசியம். அவ்வாறு அந்த நாளில் காகம் சாதம் எடுக்கத் தவறினால், அந்த ஜீவன் தன்னால் அனுபவிக்கக் கொடுத்துவைக்காத ஏதோ ஒன்றை நினைத்துத் துக்க சாகரத்தில் ஆழ்ந்துகிடப்பதாகவும் கருதப்படுகின்றது. உடனே அவனது சுற்றத்தினர் அவ்வித அபேக்ஷை என்னவென உத்தேசித்து, அதனைநிறைவேற்றுவதாக நிருமாணித்தபடி அநேக மணிநேரம் காத்துச் சலிப்பார்கள். அப்பொழுதும் வராதிருப்பின் தர்ப்பைப் புல்லை முடிச்சுப்போட்டு காகமாகப் பாவனை செய்து, அந்தச் சாதத்தைச் தொட்டாகிலும் தங்கள் மூட மனத்தைத் தேற்றுவார்கள்! அவ்வித சாஸ்திரப் பிராயச்சித்தம் செய்தபோதிலும் அவர்களது கோழை மனம் மாண்டவரின் ஜீவன் சாந்தமடையாததால் தங்களுக்கு என்னென்ன துன்பம் எப்படியெப்படி வருமோவென அந்தோ! ஏங்கிப் பரிதவிக்கும்.

கருமாதி காரியங்கள்,உயிரிழந்த நாள் முதல் பன்னிரண்டு நாட்கள் வரை ஒவ்வொன்றாக நடைபெறும். முதல் வருஷாந்திர நாளானது மிக்க சிறப்பாகக் கொண்டாடப்படும்; அன்றையத் தினம் சுற்றத்தார் அனைவருக்கும், மேலும் ஏராளமான பிராமணர்களுக்கும் போஜனம் அளிக்கப்படும். மகனானவன் இவ்வித வருஷாந்திர சிரார்த்தத்தை ஒவ்வோராண்டும் தவறாது நடத்தவேண்டும். அந்தக் குடும்பத்தினர் விவசாயிகளாக இருப்பின் அவ்விதத் திதி நாட்களில் அவர்களது கால்நடைகள் ஒன்றாகிலும் வேலை செய்யக்கூடாது; ஏனெனில் மாண்டவனின் ஜீவன் அந்தப் பிராணிகள் ஏதாவதொன்றில் புனர் ஜனனம் எடுத்திருக்கக்கூடுமன்றோ!

இவ்வித மௌடீகப் புராணக் (Anthroporphic) கொள்கைகள் ஹிந்து மக்களிடத்தே மாத்திரம்தான் காணப்படுகின்றனவென்று நினைக்கவேண்டாம். அவைகள் மனித சமூகம் உள்ள இடங்களிலெல்லாம் பொதுவாகவே குடிகொண்டிருக்கின்றன; ஆனால் ஒவ்வோரிடங்களிலும் சடங்குகள் மாத்திரம் காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப வெவ்வேறுவிதமாகக் கையாளப்படுகின்றன. பேய்ன்டன் (Paignton) என்ற இங்கிலாந்தின் கடற்கரையிலிருந்த ஒரு ஊரில் வசித்துவந்த— சர்வகலாசாலையில் பட்டம் பெற்ற ஓர் மாது, தனது தாயின் சமாதிக்குத் தூபமிட்டு, அன்னம் படைத்த விஷயமாக நேர்ந்த ஒரு விவகாரம் நீதிமன்றம்வரை வந்த விஷயம் மிக்க ஆச்சரியமாகவே நமக்குப் புலப்படுகின்றது. சமாதியை அழிப்பதும், பிணத்தை அடக்கம் செய்யும் விஷயத்தில் பிறர் தலையிடுவதும் மிக்க தவேஷத்தை மூட்டுவதாக எல்லா ஜன சமூகங்களாலும் கருதிப் போற்றப்படுகின்றது முதல் ஜெர்மனி யுத்தத்தில், உயிரிழந்த மக்களின் உடலினின்றும் கொழுப்பை ஜெர்மனியர் சேகரித்தனர் என்பதாக யாரோ கட்டிவிட்டதாலே ஏற்பட்ட எதிர்ப்பே அவர்களின் அழிவிற்குப் பிரபல காரணமாக இருந்தது.

மாண்ட மக்களின் ஆத்மாக்களுக்காக மனிதர்மேற்கொள்ளும் சிரமத்தை, உயிருடன் இருக்கும் மக்களின் நன்மைக்காக உபயோகிப்பார்களெனின் ஜன சமூகம் எவ்வளவு முன்னேற்றமடைந்திருத்தல் கூடும் என்பதை யோசிப்பீர்களாக! ஒவ்வொரு மனிதனுடைய செயல்களும் அவை பிறர்பால் எத்தன்மையில் பிரயோசனகரமாகப் பிரதிபலிக்கின்றதென் பதிலேயே வேரூன்றி நிலைபெறுகின்றன. ஒவ்வொருவரும் பகுத்தறிவுச் சுடரைக் கொளுத்தி அதன் வெளிச்சத்தில் மரணத்தைப் பற்றி ஆராய்ந்து பார்ப்போமானால் மௌடீக நோக்கங்களெல்லாம் சூரியன் முன் பனிப்படைகளே போல்பறந்தோடும். அன்றியும் மதப் பித்தலாட்டங்களால் ஏற்பட்ட மரணத்தைப்பற்றிய பயப் பேய் மாய்ந்து மாந்தர் மரணத்தைத் திரணமாகப் பாவித்து, ஆனந்த வாழ்வெய்துவர் என்பது திண்ணம். பாண்டவனுக்குக் கோடித் துணியையும் அறுவகையுண்டியையும் படைத்துப் புதைப்பதைக்காட்டிலும், அவைகளை மக்களுக்குக் கொடுப்பது பல வகைகளிலும் சிறந்ததாகும். சிற்ப வேலைப்பாடுகளமைந்த மசூதிகளையும், ஸ்தூபிகளையும் இவ்வுலக இன்பங்களை என்றும் வேண்டாத மாண்ட பிரேதங்களின் மேலமைத்து அழகு பார்ப்பதைவிட, ஏழைகளுக்கு உதவும்படி சத்திரம் சாவடிகளைக் கட்டுவித்தல் மிகவும் தகுதியான செய்கையாகும்.

இதனால் ஓர் அறிவாளி (Rationalist) என்பவன் மேலான இலட்சியங்களில்லாதவனென்று எண்ணவேண்டாம். அவனது இலட்சியங்களெல்லாம் நமது கண்முன் உயிருடன் நடமாடும் மக்களை மேலோங்கச் செய்வதிலேயே செலுத்தப்படுகின்றன. ஏதோ மாண்டவர்களின் ஆத்மசொரூபங்கள் (Splrits) என்பனவற்றைக் கரைசேர்ப்பதில் இவன் தனது இலட்சியங்களைச் செலுத்துவதில்லை. இந்த ஓரே காரணத்தினால்தான் அவ்வித அறிவாளிகளே இலட்சியத்தை நிருமாணித்துக் காட்டமுடியும் என்பதும், அவர்களே மக்களுடைய முன்னேற்றத்தையும், இன்பத்தையும் மேலோங்கச் செய்வரென்பதும் உண்மையாக ஒப்புக்கொள்ளக்கூடியதாகும்.

---

## மக்களாட்சி.

மாயவரம், 20-6-49.

இவ்வூர் சீர்திருத்த நாடக சபையாரால் கடந்த 11-6-49 சனிக்கிழமை இரவு, சீர்திருத்தக் கருத்துக்கள் கொண்ட "மக்கள் ஆட்சி" என்னும் நாடகம் கட்டணம் இல்லாமல் இலவசமாக நடத்தப்பட்டது.

ஏராளமான பொதுமக்கள் நாடகத்தைக் கண்டு களிப்புற்றனர்.

இடைவேளையில், நாடகக்குழுவினருக்குப்பொதுமக்களால் வெகுமதிகள் அளிக்கப்பட்டன.

---

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம். 59. கச்சேரி வீதி, ஈரோடு.